ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P


# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 4 20 — 26 ஓகஸ்ட் 1998 முழக்கம்: 188



Gnanam Center



ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் மறுபக்கங்களில்.....


ஜெயசிக்குறுய்

# 28 டாங்கிகளை சிறீலங்கா இழந்தது

## புலிகளின் விக்டர் கவச எதிர்ப்புபடைப்பிரிவு சாதனை

15 மாத காலத்தை கடந்துள்ள ஜெயசிக்குறுய் சமரில் சிறீலங்கா இராணுவம் 28 கனரக டாங்கிகளை இழந்துள்ளது. இவற்றுள் 15 முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன 13 டாங்கிகள் சேதமாக்கப்பட்டுள்ளன. துருப்புக் காவிகள் உட்பட 35 கனரக இராணுவ வாகனங் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது என வன்னி

(௸ 2ம் பக்கம்)

# சிறீலங்காவின் இராணுவ செலவு 5400 கோடி!!

தற்பொழுது சிறீலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை காரணமாக சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவீனத்திற்கென ஒதுக்கப்பட்ட 4400 கோடி ரூபாவை விட மேலும் 800 கோடி ரூபாய் தேவைப்படுமென சிறீலங்காவின் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேவைப்படும் இவ் 800 கோடி ரூபாவும் பாதுகாப்பு வரியைக்கொண்டு திரட்டப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னர் 4 வீதமாக அறிமுகம் செய்யப்பட்ட பாதுகாப்பு வரி தற்பொழுது 4.5 வீதமாக உள்ளது எனவும், யுத்த செலவீனம் தேவைப்படாதபோது மாத்திரம் இப் பாதுகாப்புவரி ரத்துச் செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இந்திய மாலுமி புலிகள் அனுதாபி?

## இந்தியா — சிறீலங்காவிடம் விளக்கம் கோரியுள்ளது

(17.08.98)

முல்லைக் கடற்பரப்பில் சிறீலங்கா விமானப்படையினால் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சானது சிறீலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையே மூழுகல் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

17 இந்திய மாலுமிகளையும், தலைமை மாலுமியையும் கொண்ட இக் கப்பல் மீது முல்லைக் கடற்பரப்பில் நடாத்தப்பட்ட முறை தமக்கு பலத்த சந்தேகத்தை உருவாக்கி உள்ளதாகவும் இவர்கள் விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் அவர்களுக்கு ஆபத்தான பொருட்களை ஏற்றிச் சென்று விநியோகித்துள்ளது என்ற சந்தேகம் நிலவுவதாகவும், சிறீலங்கா ஜனாதிபதி செயலகம் கப்பலை குண்டுவீசி அழித்த பின் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக் குற்றச்சாட்டு தொடர்பாக சிறீலங்காவிற்கான இந்திய தூதுவர் திரு மேனன் சிறீலங்காவிடம் விளக்கம் கோரியுள்ளார். இது தொடர்பான மேலதிக விபரங்களை இந்திய அரசு வெளியிடவில்லை. எனினும் இந்திய தூதுவர் சிறீ

(௸ 2ம் பக்கம்)

# இந்தியத் தலைமை மாலுமி குற்றச்சாட்டு

(17.08.98)

நாம் விடுதலைப் புலிகளால் வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் எங்கள் மீதோ, எங்கள் கப்பல் மீதோ எதுவித தாக்குதல்களையும் மேற்கொள்ள வேண்டாம் என சிறீலங்காவை கேட்டிருந்தோம். ஆனால் அரசோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ அதனைக் கருத்திலெடுக்காது எமது உயிர்களைப்பற்றியோ, கப்பலின் அழிவைப்பற்றியோ பொருட்படுத்தாது குண்டு

(௸ 2ம் பக்கம்)

# மாலுமிகள் விடுதலை

(19.08.98)

கடந்த வெள்ளியன்று முல்லைக் கடற்பரப்பில் இடைமறிக்கப்பட்ட இந்தியக் கப்பலின் 17 இந்திய மாலுமிகள் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இவர்களைப் பொறுப்பேற்று கொழும்பிற்கு அழைத்துவர உள்ளது. எனினும், போக்குவரத்து வசதியீனம் காரணமாக இவர்களது விடுதலை தாமதமாகியுள்ளது.

# வன்னியில் சிங்களவர் குடியேற்றப்படுவார்கள்!

## — ரத்வத்தை —

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவார்கள். அதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே எல்லைப்புற மாவட்டங்களில் சிங்களமக்கள் குடியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்

(௸ 2ம் பக்கம்)

# மூன்றுமுறிப்பில் விமான எதிர்ப்பு துப்பாக்கி

மாங்குளம் மூன்றுமுறிப்புப் பகுதியில் அண்மையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலில், இராணுவ தரப்பிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களில் விமான எதிர்ப்பு ஆயுதங்களும் அடங்கியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் ஒத்துக்கொண்டுள்ளன.

(௸ 2ம் பக்கம்)



(17.08.98)

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் இன்று மதியம் 12.59 மணிமுதல் அவருக்கு எதிரான பாலியல் தொடர்புகள் மற்றும் நிதி விசாரணைகளுக்கு தடங்கல் ஏற்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிரான விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்.

அவரது பதவிக்கு ஆபத்தை

(௸ 2ம் பக்கம்)

# கிளின்டன் சாட்சியமளித்தார்!

# எச்சரிக்கை செய்தபின் வெடிக்கும் குண்டு?

ஒலிபரப்பு பதிவுக் கருவி ஒன்றினூடாக குண்டு வெடிப்பு தொடர்பான எச்சரிக்கை செய்யப்பட்டதன் பின்னர் வெடிக்க வைக்கும் குண்டுகள் வவுனியா மற்றும் கொழும்பிலும் காணப்படுவதாக சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சிங்களத்திலும், ஆங்கிலத்தி

(௸ 2ம் பக்கம்)


உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது

Kumars Shop
S. A. R. L.

80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore
Exchange Co.

90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

## தமிழீழச் செய்தித் தொகுப்பு

# உருத்திரபுரத்தை கைப்பற்ற எடுத்த முயற்சி தோல்வி; 40 படையினர் பலி!

கிளிநொச்சி உருத்திரபுரப் பகுதியை சிறீலங்காப் படையினர் கைப்பற்ற எடுத்த கொமாண்டோ இராணுவ நடவடிக்கை ஒன்று விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதன்போது 40 படையினர் பலியானதுடன் நூற்றுக்கணக்கானோர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். பெருமளவான ஆயுத தளபாடங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 12ம் திகதி இரவு இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சிப் பிரதேசத்திலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான படையினர் உருத்திரபுரப் பகுதியை நோக்கி முன்னேற ஆரம்பித்தனர். இராணுவ நடமாட்டத்தையும் நடவடிக்கைகளையும் துல்லியமாகக் கணித்துவைத்திருந்த விடுதலைப்புலி அணிகள், முன்னேற முயன்ற இராணுவ படையணிகளை சுற்றி வளைத்து கடுமையான பதில் தாக்குதலை நடாத்தின. கிளிநொச்சி இராணுவமுகாமுடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட படையணி திரும்பிச் செல்வதற்காக கடுமையான பதில் தாக்குதலை நடாத்திய போதிலும், விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மறுநாள் மதியம் வரை படையினரால் மீள முடியவில்லை. இரு தரப்பினரிடையேயான மோதல் மிகவும் கடுமையானதாக இருந்தது.

புலிகளிடம் சிக்கிக்கொண்ட படையினரை மீட்பதற்காக கிளிநொச்சியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பல மீட்பு முயற்சிகளை எடுத்த போதிலும் அவையும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டன. 13ம் திகதி இரவு வேளையிலேயே படையினர் காயமடைந்த தமது சகாக்களையும் காவிக்கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் ஓடித் தப்பினர். கொல்லப்பட்ட சிப்பாய்களில் 10 பேரின் சடலங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. இவற்றில் 9 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இராணுவத்திடம் கையளிக்கப்பட்டன. மிகவும் உருக்குலைந்த நிலையிலிருந்த ஒரு சடலம் புலிகளினால் தகனம் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஆயுதத் தளபாடங்களில் ஏ.கே.எல்.எம்.ஜி., ரி56 ஆகியவை உட்பட பல தன்னியக்க ஆயுதங்கள் அடங்குகின்றன.

விடுதலைப் புலிகளின் தரப்பில் 6 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இத்தாக்குதலை சிறீலங்கா இராணுவத் தரப்பு ஒத்துக்கொண்டுள்ள போதிலும் தமது இழப்புக்கள் தொடர்பாக பொய்த் தகவல்களை வழங்கியுள்ளது. இராணுவப் பேச்சாளரின் தரவுப்படி 25 படையினர் பலியானதாகவும் 22 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

* வடபகுதியில் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனம் தொடர்பாக பல ஒழுங்கீனங்கள் இடம் பெற்றுள்ளதாக பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.
* வன்னியிலிருந்து யாழ். திரும்புபவர்கள் படையினரின் பல விதமான கெடுபிடிகளுக்கு ஆளாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.
* யாழ். மாவட்டத்தில் 'போரூட்' நிறுவனத்தின் முகாமையாளராக நோர்வே நாட்டைச் சேர்ந்த பிரடி ஆஸ்லி நியமிக்கப்பட்டுள்ளார்.
* சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் கிழக்கிலங்கை மண்டூர் கதிர் வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 17ம் திகதி ஆரம்பமாகியது.
* பருத்தித் துறை புனித தோமஸ்ர் ஆலய வளாகத்தில் புதிய குருகுலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
* யாழ் தீவுப் பகுதியில் கரையொதுங்கிய உருக்குலைந்த சடலங்கள் பலவும் அடையாளம் காணப்படாத நிலையில் அடக்கம் செய்யப்பட்டன. இச் சடலங்கள் இராமேஸ்வரம் படகு விபத்தில் பலியானவர்களுடையதாகும்.
* துணுக்காய் ஒட்டன் குளம் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான மகேந்திரன் (வயது 19) என்பவர் மரணமடைந்துள்ளார்.

## முல்லைச் செயலகம் செயலிழந்தது

சிறீலங்கா அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரண வெட்டினை கண்டித்து பொது மக்களால் நடாத்தப்படும் போராட்டம் காரணமாக முல்லைச் செயலகம் கடந்த சில தினங்களாக செயலிழந்துள்ளது.

நிவாரண குறைப்பினை கண்டித்து செயலக வளாகத்திலுள் ஒன்றுகூடிய மக்கள், செயலக வாசலில் மறியல் செய்ததன் காரணமாக செயலக நிர்வாகம் முற்றாக முடக்கப்பட்டுள்ளது. தமக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லையென போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்ற போராட்டம் கண்டாவளைப் பிரதேச அலுவலகத்தின் முன்பாகவும் நடாத்தப்பட்டு வருகிறது.

## பாடசாலை மலசலகூடத்தில் மனித எலும்புக் கூடு

சிறீலங்கா இராணுவத்தினரால் முகாமாக முன்னர் பயன்படுத்தப்பட்டுவந்த வாவிளான் மகாவித்தியாலய மலசலகூடக் குழியிலிருந்து மனித எலும்புக் கூடொன்று கடந்த 11ம் திகதி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் துப்பரவுப் பணி வேலை நடைபெறும் பொழுதே இவ் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனிதகூட்டுப் பகுதியில் வெள்ளிச்சங்கிலியும் விரலில் தங்க மோதிரமும் அணிந்த நிலையில் காணப்பட்ட இவ் எலும்புக்கூட்டினை சுன்னாகம் பொலிசார் எடுத்துச்சென்றுள்ளனர்.

இவ் எலும்புக் கூட்டினை அடையாளம் காண்பதற்காக வந்தவர்களில் ஒருவரான இந்திராணி என்பவர் அது தனது கணவருடையதென தெரிவித்துள்ளார். ஆதாரமாக மோதிரத்தையும், சங்கிலியையும் அடையாளம் காட்டியுள்ளார்.

1995ம் ஆண்டு சூரியக்கதிர் நடவடிக்கையின்போது புன்னாலைக் கட்டுவனிலுள்ள தமது வீட்டினைப் பார்வையிடச் சென்ற தனது கணவர் திரும்பவில்லை எனவும், அப்போது அப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் கணவர் கொல்லப்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

## சுதந்திரபுரத்தைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவ தொண்டு நிறுவனம் உதவி

சிறீலங்கா வான்படையினரும், இராணுவத்தினரும் ஆட்டிலெறி குண்டு வீச்சுக்கள் மூலமாக முற்றாக அழிக்கப்பட்ட சுதந்திரபுரப் பகுதி, கிறிஸ்தவ தொண்டர் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் மாதம் 10ம் திகதி நடாத்தப்பட்ட இப் பெரிதளவிலான தாக்குதல் காரணமாக 26 பேர் கொல்லப்பட்டதுடன் 50 பேருக்கு மேற்பட்டோர் படுகாயப்படுத்தப்பட்டனர். நூறுக்கும் மேற்பட்ட வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டன.

பொருளாதாரத்தில் பின்தங்கிய இப்பகுதி மக்கள், தமது வீடுகளை மீள அமைக்க முடியாது அவலநிலைக்குத் தள்ளப்பட்டனர். இம்மக்கள் படும் துயரங்களைக் கண்ட கிறிஸ்தவ தொண்டர் நிறுவனம் ஒன்று, இவர்களுக்கு உரிய குடிமனைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தில் மூன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவும் பங்குகொள்ள உறுதியளித்துள்ளன.


**சிவாசினி வாகன சேவை**

***Chivashini Transport***

**வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை**



தொடர்புகட்கு: ஜெயா

0614615984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04

முஸ்னி றெஸ்றோறன்ட்.


## யாழ்ப்பாணக் கல்லூரியின் 175 வருட சேவைக்குப் பாராட்டு

யாழ். மக்களின் கல்வி வளர்ச்சிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கடந்த 175 வருடங்களாக ஆற்றிவரும் பணிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் 175-வது ஆண்டு விழாவை முன்னிட்டே கல்விமான்களால் இப்பாராட்டு வழங்கப்பட்டது. கல்லூரியில் நடைபெற்ற 175-வது ஆண்டு விழா தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் வண. பிதா ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

175 வருடங்களிற்கு முன்னர் யாழ்ப்பாணம் இருந்த நிலையில் வெளிநாட்டவர்கள் யாரும் கால் வைக்கத் தயங்கியவேளை அமெரிக்காவில் இருந்து இங்கு வந்த கிறிஸ்தவ குருவினர் யாழ்ப்பாணக் கல்லூரியை ஆரம்பித்தனர்.

அன்று தொடக்கம் இன்று வரை கல்லூரி ஆற்றிவரும் பணி யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழக வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் தமிழ் மாணவர்கள் இங்கிருந்தபடியே பட்டப்படிப்புகளை மேற்கொண்டு அப்பரீட்சைகளை எழுத வசதி செய்துகொடுத்த கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியாகும். இவ்வாறான கல்லூரியின் பணிக்கு, கூட்டத்திற்கு வந்த பேராளர்களால் புகழாரம் சூட்டப்பட்டது.

## கசிப்புக் குடிப்பவர்கள் குருடராகும் நிலை

யாழ். குடாவில் தலைதூக்கியுள்ள கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அங்கு பெரும் தீய விளைவுகளை தோற்றுவித்து வருகின்றது. கசிப்பு அருந்துவோரில் பலர் தமது விழிப்புலனை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கசிப்பு ஒரு நச்சு என்பதையும் அது கண்களைக் குருடாக்கும் தன்மை வாய்ந்தது என்பதையும் மக்கள் பலர் உணராது கொண்டு அருந்துவதனால் இந்நிலைமை ஏற்பட்டு வருவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ். குடா இருந்த பொழுது முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் இராணுவத்தினர் குடாநாட்டை ஆக்கிரமித்ததும் தலைதூக்கியது. பல இடங்களில் கசிப்பு உற்பத்திக்கும் விற்பனைக்கும் படையினரே ஆதரவு தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது.

## கச்சாயில் மனித எலும்புக்கூடு மீட்பு

வாவிளான் மகாவித்தியாலய மலசலகூட குழியிலிருந்து மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்ட அதிர்ச்சி செய்தி யாழ். மக்களுக்கு கிடைத்த ஓரிரு நாட்களில் தென்மராட்சி கச்சாய்ப் பகுதியில் மேலும் ஒரு மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கச்சாய் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு பெண் ஒருவருடையதாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. இம்மாத முற்பகுதியில் கச்சாய்ப் பகுதியில் பெண்ணொருவர் காணாமற் போனமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதியின்றி பிரவேசித்த கப்பல் மீது புலிகள் விசாரணை

## கிபிர் விமானங்கள் கப்பலை அழித்தன

தமிழீழ கடல் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி பிரவேசித்த சிறீலங்காவின் சரக்குக் கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் இக்கப்பலை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவார்கள் என்ற அச்சத்தில் சிறீலங்காவின் குண்டுவீச்சு விமானங்கள் அதனை தாக்குதல் மூலம் அழித்துள்ளன. கப்பலில் இருந்த சிப்பந்திகள் அனைவரும் விடுதலைப் புலிகளினால் காப்பாற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

240 தொன் சீமெந்து மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்ட 'பிரின்ஸ் காஸ்' எனும் பெயருடைய கப்பல் கடந்த 16ம் திகதியன்று முல்லை கடற் பிராந்தியத்தினூடாக பருத்தித்துறையை நோக்கி பயணித்த போது விடுதலைப் புலிகளின் கடல் அணியினரால் விசாரணைக்காக இடைமறிக்கப்பட்டது. கப்பல் இடைமறிக்கப்பட்ட செய்தியை அறிந்த சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு, கப்பலைத் தாக்கி அழிக்குமாறு தனது வான்படைக்கு உத்தரவிட்டது. இதனையடுத்து கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் கப்பலின் மீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

அப்போது கப்பலில் 22 சிப்பந்திகள் இருந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள் ஆவார்கள். குண்டுத் தாக்குதலையடுத்து இச்சிப்பந்திகள் அனைவரும் விடுதலைப் புலிகளினால் காப்பாற்றப்பட்டு தரைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

தற்போது சிப்பந்திகளை விடுவிப்பதற்கான பேச்சுக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளுடன் நடாத்தி வருகிறது.

# முகமூடி மனிதர்களால் மீனவர் படுகொலை

ஆயுத முகமூடியுடன் வந்த குழுவொன்றினால் மட்டக்களப்பு கறுவாக்கேணியைச் சேர்ந்த மீனவரான இலிங்கராசா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இரவுவேளை இவர் தனது குடும்பத்தாருடன் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வேளை முகமூடி அணிந்திருந்த ஆயுததாரிகள் சிலர் இவரது வீட்டுக்கதவை தட்டித் திறக்குமாறு பணித்துள்ளனர். ஆயினும் பீதி காரணமாக இவர்கள் கதவைத் திறக்க மறுக்கவே, கதவை உடைத்துக் கொண்டு வீட்டினுள் பிரவேசித்த அவர்கள், இலிங்கராசை பிடித்து இழுத்துக் கொண்டு சென்றனர். இவரது மனைவி அக் குழுவினரைத் தடுக்க முயன்ற போது தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார். சுமார் 5 நிமிடத்தின் பின்னர் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் வெளியே கேட்டன.

மறுநாள் காலை இவரது சடலம் வீட்டிலிருந்து சுமார் 250 யார் தொலைவில் கிடக்கக் காணப்பட்டுள்ளது. படையினருடன் இணைந்து செயற்படும் கொலைக் குழு ஒன்றே இப் படுகொலைக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

# தலையாட்டிகள் சகிதம் மட்டக்களப்பில் தேடுதல்

மட்டக்களப்பு தெற்குப் பகுதி கிராமங்களான ஆரையம்பதி, தாழங்குடா, செல்வநகர், மண்முனை ஆகியவற்றில் படையினர் கடும் தேடுதல்களை நடாத்தி வருகின்றனர். விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் சில இக்கிராமங்களில் தங்கியிருப்பதாக இராணுவத்திற்குக் கிடைத்த தகவலையடுத்தே இத் தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டுள்ளது.

முகமூடி அணிந்த தலையாட்டிகள் சகிதம் கிராமங்களுக்குள் புகுந்த படையினர், மக்கள் அனைவரையும் வீடுகளில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டனர். பின்னர் தலையாட்டிகளின் முன் அவர்களை ஒவ்வொருவராக நிறுத்தி சோதனை செய்தனர். இச்சோதனைகளின் போது பலர் படையினரின் தாக்குதலுக்குள்ளாகினர். சோதனைகளின் முடிவில் ஒரு சிலர் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

# அம்பாறையில் மூன்று மின்மாற்றிகள் தகர்ப்பு

அம்பாறைப் பகுதியிலுள்ள மூன்று மின்மாற்றிகள் கடந்த 12ம் திகதியன்று இனம் தெரியாதவர்களினால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அம்பாறைப் பகுதியில் சில இடங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் பொருளாதாரத்தை ஆட்டங் காணும் வகையில் மேற்கொள்ளப்படும் மின்மாற்றி, தொலைத்தொடர்பு நிலைய குண்டுவெடிப்புகள் வரிசையில் இக் குண்டுவெடிப்பும் நடாத்தப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.


திருகோணமலை கறுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான வாகனமொன்று இனம் தெரியாத இளைஞர்களால் கடந்த 13ம் திகதியன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளது. செட்டிகுளம் விசேட அதிரடிப் படை முகாமில் தரித்திருந்த இவ் வாகனம் வெளியே கொண்டு வரப்பட்டபோதே ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் இவ்வாகனத்தை வழிமறித்து கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

மட்டுவெளியினூடாக கடற் பாதை ஒன்றின் மூலமாகவே இவ்வாகனம் கடத்திச் செல்லப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிளிநொச்சி எறிகணைக்கு மாணவன் பலி

உருத்திரபுரம் பகுதியில் தமக்கு ஏற்பட்ட தோல்வியினை தாங்கிக் கொள்ளாத சிறீலங்கா படையினர் பொதுமக்களது குடியிருப்புக்களை நோக்கி நடத்திய கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலுக்கு 14 வயதான மாணவன் ஒருவன் மூளை சிதறிப் பலியானதுடன், குடியிருப்புகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த 14ம் திகதி நண்பகல் அளவில் படையினரின் எறிகணை வீச்சு மிகவும் மூர்க்கத் தனமாக இருந்தது.

# முதலாம் ஆண்டு வீரவணக்கம்



## கப்டன் பாமகள்

### கிருஷ்ணபிள்ளை ஜனார்த்தனி

(இமையாணன், உடுப்பிட்டி, தமிழீழம்)

வீரஜனனம்: 22.04.75

வீரமரணம்: 20.08.97

கடந்த ஆண்டு 20.08.97 அன்று 'ஜெயசிக்குறுய்' ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிரான திருப்பு முனையான போர்க்களத்தில் விதையாக வீழ்ந்த அனைத்து போராளிகளுக்கும் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

காலமது தந்திட்ட<br>
கரிகாலன் சேனையிலே<br>
தளராத துணிவோடு<br>
களம் பல கண்ட<br>
வீரப்புலி பாமகளே...<br>
நீ ஜெயசிக்குறுய் படையதனை<br>
சுக்கு நூறாக்கி விட்டு<br>
ஆயிரமாயிரமாய் மாவீரர்களின்<br>
வரிசையிலே நீயுமொருத்தியாய் .......<br>
சோதரியே நீ மரணிக்கவில்லை!<br>
நீங்கள் விடுதலைக்காய் விதைக்கப்பட்டவர்கள்!

தகவல்: சகோதரர்<br>
ரங்கன் (சுவிஸ்) - சிறி குடும்பத்தினர் (ஜேர்மனி)<br>
Tel : 00 49 24 45 57 76<br>
மற்றும் தாய், சகோதரர்கள்<br>
சகோதரி குடும்பத்தினர் (தமிழீழம்)

# கேட்டது கிடைத்தது, சுருதி இறங்கியது: ஜெ. நிர்ப்பந்தத்தினால் இரு மூத்த ஐ.ஏ.எஸ்.கள் மாற்றம்

புதுடெல்லி, ஓகஸ்ட் 17

மத்திய அரசின் வருவாய்த் துறை செயலாளர் என்.கே. சிங். மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி செலாக்கப் பிரிவு இயக்குநர் பேஜ் வருவாய் இலாகா ஐ.ஆர்.எஸ். அதிகாரி இந்த இரு அதிகாரிகளும் நேற்று பதவி மாற்றம் செய்யப்பட்டனர். அதன் படி மத்திய அரசுப் பணியில் இருந்து டெல்லி யூனியன் பிரதேசத்துக்கு மாற்றப்பட்டு போக்குவரத்து ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். அதுவும் உடனடியாக இந்த மாற்றம் நிகழ்ந்தது.

இந்த அதிகாரிகள் செய்த தவறு என்ன? சட்டப்படி நடந்ததுதான். ஜெயலலிதா மற்றும் சசிகலா குடும்பத்தினர் மீதான வருமான வரி வழக்குகள், அந்நியச் செலாவணி மோசடி வழக்குகள் போன்றவை பா.ஜ.க. கூட்டணி ஆட்சி ஏற்பட்ட பிறகும் துரிதகதியில் நடந்ததுதான். தம் தலைவி ஆட்சி நடக்கும்போதும் இப்படி கெடுபிடி நடவடிக்கைகளை தொடர்ந்தது என்.கே. சிங்கும், வருவாயும் தான் காரணம் என்பது ஜெயலலிதாவின் எண்ணம். எனவே அந்த இரு அதிகாரிகளையும் மாற்ற வேண்டும் என்று ஜெ. கோரிக்கை விடுத்தார். தன்னிடம் 2 முறை தூது வந்த ஜஸ்வந்த் சிங்கிடம் இதுபற்றி கூறியபோதும் பா.ஜ. அரசு கண்டுகொள்ளவில்லை. பிரதமரிடம் வலியுறுத்தியும் நடக்கவில்லை. எனவேதான் தருணம் பார்த்து இருந்தார். அதற்குக் கைகொடுத்து வந்தது காவிரி விவகாரம். காவிரி பிரச்சினையில் நான் கூறியதை மத்திய அரசு ஏற்கவில்லை எனவே ஆதரவு வாபஸ் பற்றி பரிசீலனை செய்வேன் என்றார். உடனே வாஜ்பாயின் தூதர்கள் வந்தனர். முதலில் அவர்களை நேரில் சந்திக்காமல் பிகு செய்த ஜெயலலிதா, பாலவ யோகி தான அமைச்சருடன் பேசினார். அப்போதுதான் அந்த இரு அதிகாரிகளையும் உடனடியாக மாற்ற வேண்டும் என்றார். தூதுவனை டெல்லி சென்று ஜெ. கோரிக்கையைக் கூறினார். ஆட்சி கவிழ்ந்துவிடாமல் காப்பாற்றும் வகையில் ஜெ. நிர்ப்பந்தத்துக்கும் வாஜ்பாய் அடிபணிய வேண்டியதாயிற்று. உடனடியாக அந்த இரு பேர் அதிகாரிகளும் தூக்கி அடிக்கப்பட்டனர். இந்தச் செய்தியை வாஜ்பாய், ஜெயலலிதாவிடம் நேரில் தெரிவித்தார். அதன் பின்னர் தான் ஆதரவு வாபஸ் என்ற அழுத்தத்தை ஜெயலலிதா கைவிட்டார். ஆனால் அதிலும் ஒரு பொடி வைத்து உள்ளார். ஆதரவு வாபஸ் செய்வதா வேண்டாமா என்பது பற்றி முடிவு எடுக்கும் அதிகாரத்தை ஜெயலலிதாவிடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இதனால் ஜெ. கூட்டணி ஆதரவு நேற்றைய நிலவரப்படி நீடிக்கப்படவில்லை. இதன்படி பார்த்தால் ஜெயலலிதா கரட்டலில் இருந்து வாஜ்பாய் தப்பிவிடவில்லை என்பதுதான் உண்மை. காவிரி விவகாரத்திலும் தமிழ் நாட்டுக்கு சாதகமாகத்தான் மீண்டும் உள்ளதே தவிர, நிரந்தரமாக இல்லை. வேறு ஏதாவது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றால் மீண்டும் அந்த ஆயுதத்தை ஜெயலலிதா கையில் எடுக்க வெகு நேரம் ஆகாது என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள்.

# வருங்கால முதல்வரே என்று அழைக்க வேண்டாம்

## வைகோ!

திருநெல்வேலி, ஓக.17

'எனக்கு இப்போதுதான் சிறகுகள் முளைக்கிறது. எனவே வருங்கால முதல்வர் என என்னை அழைக்க வேண்டாம் என்று வைகோ பேசினார்.

திருநெல்வேலியில் மாநகர மாவட்ட ம.தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது. பொதுச் செயலாளர் வைகோ பேசியதாவது:


செப்டம்பர் 15ம் திகதி அண்ணாதுரை பிறந்த நாளான அன்று சென்னையில் மதிமுக பேரணி நடக்கிறது. இதில் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.


முதல்வர் கருணாநிதி குடும்பத்தோடு எனக்கு உடன்பாடு கிடையாது. கருணாநிதி குடும்ப அரசியலை தரைமட்டமாக்க வேண்டும். திமுக எனக்கு விரோதி அல்ல. அதில் நல்ல தொண்டர்கள் உள்ளனர். அண்ணாதுரை உருவாக்கிய இயக்கம் இன்று திமுக. வில் குடும்ப ஆதிக்கம் உள்ளது. திமுகவில் இருந்து என்னை வெளியேற்றியபோது 8 தொண்டர்கள் தீக்குளித்து இறந்தனர். இதையெல்லாம் மறந்துவிட்டு உடன்பாடு வைக்க முடியுமா?

காவிரி நதிநீர் பிரச்சினையில் தமிழகத்துக்கு கருணாநிதி துரோகம் செய்துவிட்டார். கடந்த 71ம் ஆண்டு கருணாநிதி ஆட்சியின் போது உயர்நீதிமன்றத்தில் நடந்த காவிரி நதிநீர் வழக்கில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட தீர்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் கருணாநிதி தீர்ப்பு கூறுவதற்குள் வழக்கை வாபஸ் வாங்கிவிட்டார். பின்னர் உச்சநீதிமன்ற நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிட்டது. அதுவரை இடைக்காலமாக தண்ணீர் திறந்துவிட கூறியது. கர்நாடகாவில் வெள்ளம் ஏற்பட்டபோது அணையில் தண்ணீர் தேக்க முடியாத நிலையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தமிழ்நாட்டிற்கு ஜூலையிலிருந்து செப்டம்பர் மாதம் வரை பருவகாலத்தில் தான் தண்ணீர் வேண்டும். இதற்கு முன்பே ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனக்கு வருங்கால முதல்வர் என்ற கோஷங்கள் வேண்டாம். இப்பொழுது தான் சிறகுகள் முளைக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.





KING Telecom

அதிகரித்த நேரத்துடன்
அறிமுகமாகின்றது புதிய "கிங் ரெலிகொம்" காட்.

மொத்தக் கொள்வனவிற்கு அதிக லாபம்!







இந்தியா 40 நிமிடம்
N° Vert 25 நிமிடம்

இலங்கை 45 நிமிடம்
N° Vert 23 நிமிடம்

92, Rue de Bellvilie
75020 Paris (M°: Pyrénees)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51




ஈராக்

# ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதிகள் அதிகரிப்பு

ஈராக் கடந்த இரண்டு மாதங்களில் 80 மில்லியன் பீப்பாய் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்துள்ளதாக அந்நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிறு வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையின் மூலமே ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதி பற்றிய செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஈராக்கின் எண்ணெய் அமைச்சர் அமீர் முஹம்மட் ரஷீத் பாக்தாத்தில் வைத்து பத்திரிகையாளரிடம் பேசுகையில், ஈராக் தற்போது தினசரி 17 மில்லியன் பீப்பாய் எண்ணெயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இது ஐநா. சபையினால் அனுமதிக்கப்பட்ட இலக்கை விட குறைவானதே ஆகும். மூன்றாம் மாதம் முதல் ஓகஸ்ட் 1ம் திகதி வரையான காலப் பகுதியில் சுமார் 80 மில்லியன் பீப்பாய் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்துள்ளது. 1991ம் ஆண்டில் ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட யுத்தத்தின்போது ஈராக்கின் எண்ணெய்த்துறை மிகப்பெரும் பாதிப்பினை அடைந்தது. அதன் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமெரிக்க மற்றும் பிற நாட்டுப் படைகளின் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகின. யுத்தம் முடிவடைந்தும் பெரும்பாலும் சுத்திகரிப்பு நிலையங்கள் செயற்பட முடியாதவாறே இருந்தன. மிகக் குறைந்த வளங்களுடன் சில எண்ணெய்க் கிணறுகள் இயங்கிக்கொண்டிருந்தன. ஆனால், அவை நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையில் இருக்கவில்லை. இந்நிலையில் ஈராக்கில் சுத்திகரிப்பு நிலையங்களை திருத்திக்கொள்ள 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட ஐநா. பாதுகாப்புச் சபை இணங்கியது. இதனைத் தொடர்ந்து ஈராக்கிய எண்ணெய் தொழில்வளப்பிரிவு தனது பழுதடைந்திருந்த சுத்திகரிப்பு நிலையங்களை திருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்கான உதிரிப்பாகங்கள் வந்து சேர்ந்தவுடன் அதன் எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கும் என எண்ணெய்வள அமைச்சர் தெரிவித்தார். தற்போது 17 மில்லியன் பரல்களாக இருக்கும் எண்ணெய் உற்பத்தி எதிர்வரும் மாதங்களில் 2 மில்லியன்களாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர், உணவுத் தேவைகளையும், ஏற்றுமதி வருமானம் பூர்த்தி செய்வதற்காகவே எமது எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.



ஈரான்

## 17 வருடங்களின் பின் ஈரானிய பக்தர்கள் ஈராக் வருகை

ஈரானிய பக்திமான்களைக் கொண்ட குழு ஒன்று மத்திய கிழக்கு ஈரான், ஈராக் எல்லையைக் கடந்து ஈராக்கில் உள்ள அவர்களது புனிதத் தலங்களை தரிசித்தனர். இது கடந்த 17 வருடங்களில் முதல் முறை நடைபெற்ற ஒரு சம்பவம் என ஈராக்கிய செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டது.

ஈரானின் பக்தர்கள் குழுவிற்கு அந் நாட்டின் கலாசார மத விவகார அமைச்சர் அயத்துல்லா முஹம்மதரானி தலைமை வகித்தார். சுமார் 750 பக்தர்களை உள்ளடக்கிய குழு, ஈராக எல்லைக்கு பாக்தாத்திலிருந்து 120 கிலோ மீற்றர் கிழக்கில் உள்ள முன்திரியா எல்லையினூடாக காலை 9.25 மணியளவில் ஈராக்கிற்குள் பிரவேசித்தது. அப்போது ஈராக் தரப்பிலிருந்து பல முக்கியஸ்தர்கள் அக் குழுவை வரவேற்றனர். இந் நிகழ்வில் பல ஆயிரம் மக்கள் கலந்துகொண்டனர்.

ஈரானும், ஈராக்கும் 1980 தொடக்கம் 1988 வரையான காலப் பகுதியில் தமக்கிடையே பெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. யுத்தம் முடிவடைந்த பின்னரும் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. இந் நிலையில் 91ம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் பின் ஈராக்கின் மீது பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஈராக் தனது பிராந்திய நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பித்தது. அந் நாட்டின் வெளியுறவுத் தூதுக்குழுவினர் சிரியா, ஈரான், லெபனான் உட்பட பல நாடுகளுக்கும் விஜயம் செய்தனர். ஈரானும், ஈராக்கும் சுமார் 6000 வரையிலான போர்க் கைதிகளை அண்மைய காலங்களில் பரிமாறிக் கொண்டன. ஈரானிய மக்களின் கோட்பாட்டுப் பிரிவின் முக்கிய மத தூபிகள் ஈராக்கிலேயே அமைந்துள்ளன.

1997 செப்டம்பர் ஈராக் தனது ஈரானுடனான எல்லைகளை திறந்துவிட முடிவு செய்தது. இதன் பிரகாரம் தற்போது முதலாவது மதத் தூதுக்குழு ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளது. இது குறித்து ஈரானின் அமைச்சர் தெரிவிக்கையில் இருநாட்டு மக்களும் தமது உறவுகளை வளர்த்துக் கொள்ள இவ் விஜயம் உதவி புரிந்துள்ளது என்றார்.

Tamileelam Archive

ORIENTAL RECORDS

G.T.V

ORIENTAL RECORDS

GLOBAL TAMIL VISION

ORIENTAL CD க்கள்
AUDIO க்களுக்கு
ஏக விநியோகஸ்தர்கள்

ORIENTAL வெளியீட்டில் தெலுங்கு, தமிழ், மலையாள பாடல்கள் அடங்கிய CD க்கள்

கர்நாடக (Classical) பாடல்கள் அடங்கிய CD க்கள் போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

GTV இன் வீடியோ வெளியீடுகள்

இசைமழை VOL 1
இசைமழை VOL 2
காதலா! காதலா!
துள்ளித் திரிந்த காலம்
பூச்சூடவா
இது தான் காதல்
உதவிக்கு வரலாமா?
வேலை (JOB)
கிழக்கும் மேற்கும்
பெரிய மருது
கல்யாண வைபோகம்
உயர்ந்த உள்ளம்
ஊமை விழிகள்
ஊர்க்காவலன்
சரஸ்வதி சபதம்
புதிய பறவை
பணக்காரன்
நம் நாடு

வர்த்தக ரீதியான தொடர்புகளுக்கு: G.T.V
Tel: 01 42 09 02 57 - Fax: 01 42 09 06 38

புதிய அறிமுகம்

# ஆர்த்தி

**Nouveau Pack Complice**

SFR இரண்டு Portables Telephone

**890 Frs மட்டுமே!**

* Mise en service இலவசம்
* Frais de dossier இலவசம்
* 1 h Plus entre deux Portables
* Pack Motorola 290 Frs
* Pack Alcatel 490 Frs

ஜூன் 27 வரை
200 Frs கழிவு +
1 Football
இலவசம்

– சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

**OLA**

Coffret OLA
Philips - 90 Frs
Alcatel - 290 Frs
Nokia - 690 Frs
இலவசம் Frais de dossier

## ஆர்த்தி ஸ்ரூடியோ

**15 RUE CAIL, 75010 PARIS.**
**M°: GARE DU NORD - LA CHAPELLE**
**Tel: 01 40 34 20 90**



உத்தியோகபூர்வ

# மொழிபெயர்ப்புச் சேவை

(கிருஷ்ணபிள்ளை மாயவன்)

உங்கள் சகல மொழிபெயர்ப்புத் தேவைகள், பிரெஞ்சு நிர்வாக – நீதிமன்றத் தேவைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான சட்ட ஆலோசனைகளுக்கு கடந்த 14 ஆண்டுகளாக அரசாங்க அங்கீகாரம் பெற்று பாரிஸ் நகரில் (பாரிஸ்-18 - மெத்ரோ மார்க்கடே புவசொனியேயில்) சேவையாற்றி வரும் நாம் எமது அலுவலகத்தை தற்போது புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்துள்ளோம்

எமது மொழிபெயர்ப்புத் தேவைகள் சகல நீதி - நிர்வாக அலுவலகங்களினாலும் வெளிநாட்டுத் தூதரகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும்

புதிய முகவரி:
39, Bld. de la Chapelle. 75010 Paris.
(Mo: La Chapelle / Gare du Nord)
Tel / Fax: 01 40 34 53 41 - Port: 06 14 89 68 07
(எம்.ஜி.ஆர். வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தினுள்ளே, ஈழநாடு, தமிழாலயம் நிறுவனங்களுக்கு அருகாமையில்)



தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரெஞ்சுக் கிளை நடாத்தும்

# மாபெரும் தமிழர் விளையாட்டு விழா

## 30.08.1998

**காலை 9.00 மணி**

GTV ஆதரவில்
பாரிசின் முன்னணி இசைக்குழுக்களின் இசை மழை
Cool Guys நடனக் குழுவின் மேற்கத்தேய நடனம்

பிரான்சின் முன்னணிக் கழகங்கள் பங்கேற்கும்

குமார்ஸ் ஆதரவில்
* உதைபந்தாட்டப் போட்டி

சபறினா உணவகம் ஆதரவில்
* கிரிக்கட் போட்டி

ஞானம்ஸ் ஆதரவில்
* கரப்பந்தாட்டப் போட்டி
* வலைப்பந்தாட்டப் போட்டி
* கூடைப்பந்தாட்டப் போட்டி

என்பவற்றுடன் நீங்கள் பங்கேற்கும்
சாந்தினி உணவகம் ஆதரவில்
கிளித்தட்டு, கயிறிழுத்தல்
வூட்லண்ட்ஸ் கோசல்,
வூட்லண்ட்ஸ் உணவகம் ஆதரவில்
முட்டி உடைத்தல்,
சங்கீதக் கதிரை, சாக்கோட்டம்
தலையணிச்சண்டை, குறிபார்த்துச் சுடுதல்,
விநோத உடைப்போட்டி
மற்றும் சிறுவர்களுக்கான கேளிக்கை விளையாட்டுப் போட்டிகள்

காலை முதல் மாலை வரை உங்கள் பசியாற்ற

## தமிழீழ உணவகம்

★ அப்பம் ★ தோசை
★ கொத்துரொட்டி
★ றோலஸ் ★ வடை
★ சூசியம் ★ போண்டா
★ கோழிக்கால் பொரியல்
★ கட்லட் ★ மீன்பொரியல்

என்பவற்றுடன்
தமிழீழ மணம் கமழும் ஒடியல் கூழ்
மேலதிக விபரங்களுக்கு: 01 40 38 30 74

# Stains மைதானம்

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# மணிகட்டும் பொறுப்பு

சிறிலங்கா அரசாங்கம் கடந்த வாரம் தனது பாதுகாப்புச் செலவினத்தை 4400 கோடி ரூபாவிலிருந்து 5200 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதாவது தமிழ் மக்களைக் கொல்வதற்காக தமிழ் மக்களது உடமைகளை அழிப்பதற்காக தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதற்காக மேலதிகமாக 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிதி நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் சிறிலங்காவின் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்தப் பணத்தை பொது மக்களிடமிருந்து தற்போது 4 வீதமாக அறவிடப்படும் பாதுகாப்பு வரியை 4.5 வீதமாக அதிகரிப்பதன் மூலம் திரட்டிக்கொள்ளலாம் எனத் திட்டமிட்டுள்ளது.

அரிசி, மரக்கறி, உடுதுணி முதலான அத்தியாவசியப் பொருட்களிலிருந்து - தொலைக்காட்சிப் பெட்டிகள் இயந்திர சாதனங்கள் மோட்டார் வாகனங்கள் முதலான சகல பொருட்களுக்கும் பாதுகாப்பு வரி விதித்திருப்பதன் மூலம் அவற்றை கொள்வனவு செய்யும் அனைவரினதும் தலையில் யுத்தச் செலவை கட்டிவிடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

யுத்தத்தை விரும்பாத ஒரு குறிப்பிட்ட பகுதி சிங்கள மக்கள் தவிர்ந்த 'தமிழர்களை அழிக்கவேண்டும் - தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும்' என்ற எண்ணம் கொண்ட பேரினவாத சிங்களவர்களுக்கு இது ஏற்புடையதான ஒரு விடயமாக இருக்கலாம். ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக்குள் வாழும் தமிழ் மக்கள் தங்களையும், தங்கள் தொப்புள்கொடி உறவுகளையும் கொல்வதற்கும், தங்கள் சொத்துக்களை அழிப்பதற்கும் தங்கள் தாயகத்தை அடிமைப்படுத்துவதற்கும் சிறிலங்கா அரசாங்கம் நடத்தும் யுத்தத்திற்கு பாதுகாப்பு வரி என்ற பெயரில் கட்டாயமாக பணம் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

உண்மையில் சிறிலங்காவின் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்த பாதுகாப்பு வரித் திட்டத்திற்கு சிங்களவர்களை விட தமிழர்களே அதிகளவுக்கு பணம் செலுத்தப்போகின்றார்கள்.

ஏனெனில் சிறிலங்காவிலுள்ள பெரும்பாலான சிங்கள விவசாயிகள்- பெருமளவுக்கு சுய பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் நுகர்வுத்தேவை என்பது அவர்களது பற்றாக் குறையான வருமானத்துக்குள் மட்டுப் படுத்தப்பட்டஒன்றாகும்.

ஆனால்-தமிழ் மக்கள் சிங்களவர்களை விட அதிகளவுக்கு நுகர்வுத் தேவை உடையவர்களாக இருக்கின்றார்கள். யுத்தமும் அரசின் இராணுவ அடக்குமுறைச் சட்டங்களும் அவர்களது சுய பொருளாதார வாய்ப்புகளை பெருமளவுக்கு நிர்மூலமாக்கி விட்டதால் சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே அவர்களது வாழ்க்கை நடக்கிறது.

அதே சமயம் வன்னி மண்ணிலும், கிழக்கு அகதி முகாம்களிலும் பல இலட்சக் கணக்கான தொப்புள் கொடி உறவுகள் ஒரு வேளை உணவுக்கு அல்லாடுகின்ற நேரத்தில்- கொழும்பிலும், யாழ்குடாநாட்டிலும் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்து டாம்பீக வாழ்வு வாழும் ஒரு கூட்டம் தமிழ் சமூகத்தில் உருவாகிவிட்டது.

இங்கே புகலிட நாடுகளில் அவர்களது இரத்த உறவுகள், மற்றும் பிள்ளைகள் பணமீட்டுவதற்கு படுகின்ற துன்பத்தை உணராத இவர்கள் 'வெளிநாட்டு பவுசைக் காட்டுவதற்காக செய்கின்ற ஆடம்பரச் செலவுகள்- வன்னியிலும் கிழக்கிலும் துன்பப்படுகின்ற நமது மக்கள் இன்னும் துன்பத்துக்குள்ளாக்கவே துணை புரியப்போகின்றன.

சாப்பிடுவதற்கு அரிசி வாங்கவேண்டும் 'மா' வாங்கவேண்டும், உடுப்பதற்கு உடுதுணி வாங்கவேண்டும் அவற்றைப் புறக்கணிக்கும் பட்சத்தில் உடனடியாக நமது மக்களுக்கு மாற்றுவழி எதுவும் கிடையாது. ஆனால் மோட்டார் சைக்கிள் ரீ.வி. டெக் இத்தியாதிகள் இல்லாமல் வாழமுடியும்.

ஆனால் இதை இவர்களுக்கு யார் எடுத்துச் சொல்வது? எங்களிடம் பணம் இருக்கிறது. நாங்கள் விரும்பியபடி செலவு செய்வோம். விரும்பியதையெல்லாம் வாங்குவோம். என்று விதண்டாவாதம் செய்யும் இவர்களை வழிக்குக்கொண்டு வருவது யார்? இவர்கள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு சிறிலங்கா அரசாங்கம் வாங்கும் ஒரு செல், ஒரு துப்பாக்கி ரவை ஏன் இவர்களது உறவுகளின் உயிரையே பறிக்காது என்பதை இவர்களுக்கு யார் உணர்த்துவது?

அந்தப்பொறுப்பு இங்கே புகலிடத்திலுள்ள தமிழர்களுக்குண்டு. இங்கிருந்து இவர்கள் சிறிலங்கா அரசாங்க வங்கிகளுக்கு அனுப்பும் பணத்தின் அளவைக் குறைத்தால் அங்கு அவர்கள் செலவு செய்யும் அளவும் குறையும். அதனால் சிறிலங்கா அரசுக்கு கிடைக்கவேண்டிய பாதுகாப்பு வரியும் குறையும். அதே நேரம் சிறிலங்கா அரசாங்கத்துக்கு கிடைத்துவரும் அந்நிய செலாவணியிலும் பாரிய வெட்டு விழும்.

இங்குள்ள தமிழர்கள் நமது தேசத்தைக் காப்பாற்ற - மக்களைக் காப்பாற்றி ஒன்றுபட்டு இதைச் செய்யவேண்டியது ஒரு வரலாற்றுக் கடமையாகும்.

தமிழீழ கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த துபாய் நாட்டு கப்பல் ஒன்றை கடற்புலிகள் தமிழீழத்திற்கு கிழக்கே இடைமறித்து பரிசோதனைக்கு உட்படுத்தினர் தமிழர்களுக்கு எதிராக தடைவிதிக்கப்பட்ட சீமெந்து, மோட்டார் சைக்கிள் போன்றவற்றுடன் எதிரி இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளாகப் பட்ட பிரதேசத்திற்கு பயணம் செய்த இக் கப்பலை இடைமறித்து பரிசோதிப்பது தமிழ் முத்திற்கு உள்ள அரசியல் உரிமையும் கடமையுமாகும். இன்றைய சர்வதேச நடைமுறைகளுக்கு அமைய பொது இவ் உரிமைகள் பல தரப்புக்களால் அங்கீகரிக்கப்படாவிட்டாலும் கடமையை ஆற்றவேண்டிய கட்டாயம் தமிழ் முத்தின் கடற்பரப்பை பாதுகாக்கும் கடற்புலிகளுக்கு உண்டு.

அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளமை தமிழர்கள் தமது ஆட்சி உரிமைகளுக்குரிய அதிகாரத்தை பயன்படுத்துகிறார்கள் என்பதை மட்டுமல்ல, சர்வதேச சட்ட விதிகளையும்- மனிதாபிமான கோட்பாடுகளையும் பின்பற்றுகிறார்கள் என்பதையும் புலப்படுத்துகிறது.

இங்கே தமிழர்களின் ஆட்சி உரிமையை ஒட்டி அந்தந்து தொடர்பாக பல குழப்பங்கள் நிலவுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள சிறிலங்கா அரசு மறுக்கின்றது. அமெரிக்க அரசு பயங்கரவாத அமைப்புகளுக்கான விதிகளை தமிழர்களின் ஆட்சியுரிமையை பிரதிபலிக்கும் அமைப்புக்கு எதிராக பாவித்துள்ளது இந்தியா புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை இன்னமும் நீக்கவில்லை.

ஆனால் மறுபுறம் ஐநா சபையின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி திரு ஒலரா

# கடற்பரப்பில் ஆட்சியுரிமையை நிலைநாட்டும் கடற்புலிகள்

உலக சமூகத்திற்கு விடுதலைப் புலிகள் நேரடித்தெளிவாக இதனை அறிவித்துவிட்டனர். விடுதலைப்புலிகளின் இந்த உரிமையை 'Defacto' கோட்பாடு வடாக உலக சமூகம் அறிந்திருந்தது. முறையானதாக தேசம் விடுவிக்கப்பட்டு உலக கடல்பாதுகாப்பு சட்டங்களிலும் சர்வதேச சட்ட வரைமுறைகளிலும் புலிகளின் இவ் உரிமை அங்கீகரிக்கப்படாது இருந்தாலும், நடைமுறை ரீதியான தமிழர் அரசின் கடற் பாதுகாப்பு படையினை கடற்புலிகள் மேற்கொண்டே ஆகவேண்டும் என்பதை உலகம் அங்கீகரித்தே ஆகவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

## பார்வை

கடற்புலிகளின் இவ் உரிமையை பறிக்கும் நோக்கில், துபாய் கப்பல் பணியாளர்களை பணயம் வைத்து 22 மாலுமிகளுடன் அக் கப்பலை சிங்கள அரசு குண்டுவீசி அழிக்க முயன்றுள்ளது. புலிகளினால் மாலுமிகள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள் ஆயினும் இக் குண்டுவீச்சானது சிங்களப் படையினரின் சட்டவிரோத - நாகரீக விரோத மனோபாவத்தை காட்டுகின்றது.

இன்று இக்குண்டுவீச்சு மூலம் 17 இந்திய மாலுமிகளின் உயிர்களைப்பலியெடுக்க முயன்று சிங்கள அரசு, இந்திய தலைமை மாலுமியை புலிகளின் கையாள் என முத்திரை குத்த முற்படுகிறது. இவ்விரு நடவடிக்கைகளும் எழுந்தமானமாக போர்க்கள தளபதிகளில் அல்லது உப தளபதிகளின் உத்தரவின் காரணமாக இடம்பெற்றிருக்க முடியாது. ஏனெனில் புலிகள் கப்பலை இடைமறித்தது தொடர்பாக சிங்கள இராணுவ அமைச்சு விடுத்த அறிக்கையில், புலிகள் கப்பலைக்கடத்திவிட்டதாக ஒப்பாரி வைத்துள்ளது. கப்பல் மீது 4 தடவைகள் யுத்தவிமானங்கள் குண்டுகளை வீசியபின் சந்திரிகாவின் ஊடகத்துறை செயலாளர், புலிகளுக்கு அக்கப்பல் ஒத்தாசை புரிந்ததால் தாக்கப்பட்டதாக அறிவித்தது. இன்று இந்திய அரசு சந்திரிகாவிடம் இம் முரண்பாடு குறித்து நாம் குற்றச்சாட்டு குறித்தும் விளக்கம் கேட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் சர்வதேச உடன்பாடுகளுக்கு அமைய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) ஊடாக இந்திய மாலுமிகளை இந்தியா ஒட்டுமொன்றுவன்னிக்கு சென்று புலிகளை சந்தித்த சர்வதேச சிறுவர் சட்டங்களை தமிழர் பகுதிகளில் (தமிழீழத்தில்) அமுல்படுத்துவது தொடர்பாக பேசியுள்ளார். உலக போர்விதிகளை குறிப்பாக பொதுமக்களை பாதுகாப்பதற்கான விதிகளை கண்காணிக்கும் சர்வதேச நிறுவனங்கள், புலிகளுடன் தொடர்ச்சியான சட்ட ரீதியான தொடர்புகளை மேற்கொள்ளுகின்றனர். ICRC தற்போது தமிழீழ-சிறிலங்கா அரசகளுக்கு இடையேயான போர் தொடர்பான விதிகளுக்கு அமைந்த செயற்பாடுகளாற்றுகின்ற புரியும் சர்வதேச அமைப்பாக உள்ளது.


அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பல்வேறு அறிக்கைகள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் பல்வேறு வேண்டுகோள்கள் என்பன புலிகள் முன்வைக்கும் கருத்துக்களும் - கோட்பாடுகளும் புலிகளை ஒரு தேசிய அரசுக்குரிய விதிகளை பின்பற்றுமாறு கேட்கும் சாராம்சத்தை வெளிக்காட்டிவருகின்றன. இது ஒரு குறைபாட்டு நிலைப்பாடாகும்.

தமிழீழம் தெளிவான பௌதீக எல்லைகளை வரையறைசெய்து உருவாகவில்லை ஆயினும் தெளிவற்ற பௌதீக எல்லைகளுடன் குறைப்பிரசவமாக உருவாகியிருப்பதை உலகம் அங்கீகரித்து வருகிறது.

தற்போது இடம்பெற்ற கடற்பரப்பு தொடர்பான விடயத்தில் சிறிலங்கா தமிழீழ கடற்பரப்பில் தன் இறைமையை (Sovereignty) இழந்துவிட்டதை ஒப்புக் கொள்ள முடியாத ஆத்திரத்தில், சர்வதேச சட்ட விதிக்கு முரணாக சிவிலியன் கப்பல் ஒன்றை குண்டுவீசி அழிக்க முனைந்தது. மறுபுறம் தமிழர்கள் தம் கடற்பரப்பில் தம் கடமைகளையும் உரிமைகளையும் நிலைநாட்டி வருகிறார்கள் என்பது மட்டுமல்ல, சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய பிறநாட்டு மாலுமிகளை காப்பாற்றி விடுவித்தும் உள்ளார்கள்.

இவ் வளர்ச்சிப்போக்கு புலிகளின் - தமிழீழ தேசிய அரசினை பிரதிபலிக்கும் அமைப்பின் - அரசியல், இராணுவ, இராஜதந்திர கோட்பாடுகள் தமிழீழம் என்பதை சகல வரைவுகள் ஊடாகவும் அமுல்படுத்தும் இலக்கைநோக்கி நகர்த்துவதை வெளிக்காட்டுகிறது.

- ராஜா



# புலம்பெயர் மரணங்கள் - தற்கொலைகள் - கொலைகள்

## ஒரு சிறப்பு புலனாய்வுத் தொடர்

அந்த இளம் பெண்ணின் பெயர் மகேஸ்வரி. யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்தவர். வயது 32. கணவர் மற்றும் மூன்று குழந்தைகளுடன் பாரிசின் புறநகர் பகுதியில் வசித்துவந்த அவர், ஒரு குளிர் காலத்தில் 12 மாடிக் கட்டடத்தில் இருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

தற்கொலை செய்யப் போவதாக முன் கூட்டியே முடிவெடுத்து தற்கொலை செய்து கொள்பவர்கள் தாங்கள் தற்கொலை செய்வதற்கான காரணத்தை கடித மூலம் எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்வது பொதுவான வழக்கம்.

ஆனால் மகேஸ்வரி அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

அவருக்கும், அவரது கணவருக்கும் அடிக்கடி சண்டை வருவதுண்டு. வாரத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது அவர்கள் சண்டை போட்டுக்கொள்ளவில்லை என்றால் 'அது அதிசயம்' என்று சொல்கிற அளவுக்கு அவர்கள் இருவருக்கும் இடையில் முரண்பாடு இருந்தது.

மகேஸ்வரியோ கணவனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்கிற ரகம்.

அவரது கணவன் பஞ்சலிங்கமோ, மனைவி என்பவள் கணவனுக்கு அடங்கி வீட்டோடு கிடக்க வேண்டும் என்கிற ஆணாதிக்க மனப்பான்மை கொண்ட பேர்வழி.

இரண்டுபேருக்கும் 8 வயது வித்தியாசமும் கூட.

ஏதோ காலாகாலத்தில் திருமணம் செய்துவைத்துவிட வேண்டும் என்பதற்காக இரண்டு பேருக்கும் அவர்களது பெற்றோர்கள் திருமணம் செய்துவைத்து விட்டார்கள். மற்றப்படி அவர்களுக்கிடையில் வயது, கல்வி, மனப்பொருத்தம் எல்லாவற்றிலுமே வேறுபாடு இருந்தது.

மகேஸ்வரி பல்கலைக்கழகப் பட்டதாரி. பஞ்சலிங்கமோ உயர்தரக் கல்வியில் சித்தியடையாதவன்.

வெளிநாட்டு மாப்பிள்ளை என்பதற்காக மகேஸ்வரி முதலில் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டுவிட்டாலும் திருமணமாகி பிரான்சிற்கு வந்த பின் தன்னுடைய கணவன் தனக்குத் தகுதியில்லாதவன் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டிருந்தது. பாரிஸ் நகரத்து உணவு விடுதி ஒன்றில் வேலை செய்த அவள் கணவன் பஞ்சலிங்கத்திற்கு மனைவியின் 'மனச் சிக்கலை' தீர்த்து வைக்கும் அளவுக்கு மனப்பக்குவமும் இல்லை. நேரமும் இல்லை. மூக்கு நுனியில் கோபத்தை வைத்திருக்கும் அவன், 'அடி உதைதான் மனைவியைத் தன் சொற்படி கேட்க வைக்க சரியான வழி' என்ற மரபு வழிக் கருத்தையும் கொண்டிருந்தான்.

*வெளிநாட்டு மாப்பிள்ளை என்பதற்காக மகேஸ்வரி முதலில் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டுவிட்டாலும் திருமணமாகி பிரான்சிற்கு வந்தபின் தன்னுடைய கணவன் தனக்குத் தகுதியில்லாதவன் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டிருந்தது. பாரிஸ் நகரத்து உணவு விடுதி ஒன்றில் வேலை செய்த அவள் கணவன் பஞ்சலிங்கத்திற்கு மனைவியின் 'மனச் சிக்கலை' தீர்த்து வைக்கும் அளவுக்கு மனப்பக்குவமும் இல்லை. நேரமும் இல்லை. மூக்கு நுனியில் கோபத்தை வைத்திருக்கும் அவன் 'அடி உதைதான் மனைவியைத் தன் சொற்படி கேட்கவைக்க சரியான வழி' என்ற மரபு வழிக் கருத்தையும் கொண்டிருந்தான்.*

இந்த நிலையில் மகேஸ்வரி தற்கொலை செய்துகொண்ட போது பஞ்சலிங்கம்தான் அவளை அடித்துக்கொன்றுவிட்டு, மாடியிலிருந்து தூக்கிப்போட்டு தற்கொலை என்று 'செட் அப்' செய்துவிட்டான் என்று அவளது உறவினர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்கள்.

நங்கள் குற்றச்சாட்டிற்கு ஆதாரமாக 8 வயதும், 5 வயதும், 3 வயதும் நிரம்பிய குழந்தைகளைத் தவிக்க விட்டுவிட்டு எந்தத் தாயாவது தற்கொலை செய்துகொள்வாளா? அப்படி அவள் சாக வேண்டுமென்று தீர்மானித்திருந்தால் தன்னுடைய குழந்தைகளையும் கொலை செய்துவிட்டுத்தான், தான் தற்கொலை செய்துகொள்வாள் என்கின்ற கருத்துக்களை முன் வைத்தார்கள்.

இந்தச் சம்பவம் நடந்து சில மாத காலத்தின் பின் தாயில்லாத தனது மூன்று குழந்தைகளையும் பராமரிப்பதற்காக வேலையையும் விட்டுவிட்டு வீட்டிலிருந்து சிரமப்பட்டுக்கொண்டிருந்த பஞ்சலிங்கத்தை நான் சந்தித்தபோது, ஊரார் சொல்கிறபடி தனது மனைவியை தான் கொல்லவில்லை என்றும், அவள் தானாகத்தான் தற்கொலை செய்துகொண்டாள், அதற்குக் காரணம் சீட்டுத்தான் என்றும், அவன் தனது பிள்ளைகளின் தலையில் அடித்து சத்தியம் செய்தான்.

இது எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. கணவன்-மனைவி உறவை பிரிக்கின்ற அளவுக்கு தனது மூன்று குழந்தைகளையும் விட்டுவிட்டு ஒரு தாய் தற்கொலை செய்து கொள்கிற அளவுக்கு அப்படி என்ன சீட்டுப்பிரச்சினை? என்று அவரைத் திருப்பிக் கேட்டேன்.

அதற்கு அவர் 'நான் எனது நண்பன் ஒருவனிடம் 60,000 பிராங்கிற்கு (3000 X 20) சீட்டுக் கட்டினேன். நண்பன் தானே என்ற நம்பிக்கையில் கடைசியாக எடுக்கலாம் என்று விட்டுவிட்டேன். இரண்டு பேர் சீட்டை எடுத்துக்கொண்டு கடையிலிருந்து போய்விட்டார்கள். அவன் நொடிந்துபோய்விட்டான். என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு 'மச்சான் ஒரு வருஷம் எனக்குத் தவணை தா! நான் உழைச்சு உன்ரை காசை திருப்பித்தாறன்' என்டு கெஞ்சினான். நானும் வேறு வழியில்லாமல் அதற்கு ஒத்துக் கொண்டிட்டன். இது என்ரை மனிசிக்கு பிடிக்கேல்லை. என்னோடு சண்டை பிடிச்சுக் கொண்டு தற்கொலை செய்கிற முடிவை எடுத்திட்டாள். விசரி' என்றார்.

'ஒரு பெண் தற்கொலை செய்கிற அளவுக்கு அதுவும் தன்னுடைய மூன்று குழந்தைகளை விட்டுவிட்டு தற்கொலை செய்ய துணிவதற்கு சாதாரண ஒரு சண்டை காரணமாயிருக்க முடியாது. 'அவளுடைய மனதில் ஏதோ நிறைவேறாத பாதிப்பு இருந்திருக்கவேணும். அப்படி என்ன உமது மனைவிக்கு மனப் பாதிப்பு' என்று அவரிடம் திருப்பிக்கேட்ட போது,

'எங்களுக்குள்ளை அடிக்கடி சண்டை வரும். சாகிற அன்டைக்குக் கூட இந்தச் சீட்டாலை சண்டை வந்தது. அன்டைக்கு தான் அவளுக்கு நல்லா அடிக்கப் போட்டன். அதுதான் அவள் மனமுடைந்துபோனாள் என்டு நினைக்கிறன்' என்றார்.

'வழக்கமா உங்களுக்குள்ளை சண்டை வாறதுக்கு ஏதாவது ஒரு விடயம் காரணமாய் இருந்திருக்கும். அதுபோலத்தான் அன்டைய சண்டைக்கு சீட்டுக் காரணமாய் இருந்திருக்கு. ஆனால் அது தற்கொலை செய்யிற அளவுக்கு ஏன் பெரிசாச்சு' என்று கேட்டபோது, 'என்னுடைய மனிசி எப்பவும் மற்றவைகளாக வாழ நினைக்கிறவள். இங்கே பக்கத்திலை அவளின்ரை ஊர்க்காரர் இருக்கினம். அவை கார் அது இதென்டு நல்லாய் இருக்கினம். அவையைப்போல நாங்களும் கார் வாங்கோணும் என்று அவள் நச்சரித்துக் கொண்டிருந்தாள். நான் சீட்டைப் போட்டதே கார் வாங்கத்தான். சீட்டுக்காரன் ஏமாத்தினது அவளாலை தாங்க முடியேல்லை. அதுதான் இந்த முடிவுக்கு வந்திட்டாள்' என்றார்.

'இப்படியான சூழ்நிலையில மனைவிக்கு நீர் ஆறுதல் அல்லவா சொல்ல வேண்டும். அடிக்கிறது எண்டது கொலை செய்யிறதுக்கு சரி அது தெரியுமோ உமக்கு?' என்று நான் கொஞ்சம் கடுமையாகக் கேட்டபோது உண்மையில் அவர் பயந்து போய்விட்டார்.

பொதுவாக நமது ஆண்களிடம் இருக்கும், பெண்டாட்டி என்பவள் நமது அடிமை. காசு வாங்காத வேலைக்காரி என்கிற மரபு வழிப்பார்வையும், எமது பெண்களிடையே இருக்கின்ற பார்த்து ஒழுகும் (கொப்பியடிக்கும்) சீரழிவுக் கலாச்சாரமும், பல்வேறு குடும்பச் சிக்கல்களுக்கும், மனச்சிதைவு நோய்களுக்கும், தற்கொலைகளுக்கும் காரணமாக இருக்கிறது.

(பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

- நக்கீரன்

## 'பார்த்தொழுகும் கலாச்சாரம் என்றால் என்ன?'

புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்கள் (அவர்கள் தனி மனிதர்களாக இருந்தாலும் சரி, குடும்பங்களாக இருந்தாலும் சரி) எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், தாழ்வுச்சிக்கல்களுக்கும், சீரழிவுகளுக்கும் காரணமாக இருப்பது பார்த்தொழுகும் கலாச்சாரம் - அதாவது 'கொப்பி'க்கலாச்சாரம் ஆகும்.

பார்த்தொழுகும் கலாச்சாரம் என்பது ஒருவரைப் பார்த்து அவரது பாணியில் மற்றவர்கள் வாழநினைப்பது. பக்கத்து வீட்டுக்காரர் ஒரு பெரிய 'சோகேஸ்' வாங்கி விட்டால் அது போல் தாங்களும் வாங்கவேண்டும் என்பது; அவர் ஒரு பெரிய 'லெதர் செற்றி' வாங்கிவிட்டால், தாங்களும் அதுபோல் வாங்கவேண்டும் என்று நினைப்பது; அவர் ஒரு கார் வாங்கிவிட்டால் அவரைவிட தாங்கள் நல்ல கார் வாங்க வேண்டும் என்று நினைப்பது. அதாவது அடுத்தவர் தான் சமூகத்தில் பெரிய புள்ளி, பணக்காரர் - மற்றவர்களைவிட உயர்ந்தவர் என்று காண்பிப்பதற்கு எதை எல்லாம் செய்கிறாரோ, அவரைவிட அதிகமாக அந்த விடயங்களை தாங்கள் செய்ய நினைத்து தாங்கள் அவரைவிட உயர்ந்தவர் என்று காண்பிக்க நினைப்பதே பார்த்தொழுகும் கலாச்சாரம் ஆகும்.

இந்த சீரழிவுக் கலாச்சாரத்துக்காக, பணத்தை முடக்குவது; வரவுக்கு மிஞ்சி செலவு செய்வது - கடன் வாங்குவது என்பன நமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பது மட்டும் அல்லாமல் கடைசியில் நமது மக்கள் மனநோயாளிகளாவதற்கும் - தற்கொலை செய்து கொள்வதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றன.

இந்த சீரழிவுக் கலாச்சாரம் அடிப்படையில் ஒரு சாதியக் கலாச்சாரமாகும். அதாவது சாதிய வரலாற்றின் தொடக்க காலத்தில் பிராமணர்கள் மற்றவர்களை வெளியே விட்டு தாங்கள் மட்டும் உள்ளே இருந்து அகமணம் - தீட்டு என்கின்ற சடங்காசாரங்கள் மூலம் தங்களை தனிமைப்படுத்தி மற்றவர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்று காட்டிக்கொண்டபோது, வெளியே நின்றவர்கள் அவர்களுடைய வசதிக்குத் தக்கபடி பிராமணர்களைப் பார்த்து ஒழுகத்தலைப்பட்டு, படிமுறையாக மற்றவர்களை வெளியே தள்ளினார்கள்.

சாதிய அமைப்பின் தோற்றத்துக்கு அடிப்படையான இந்த பார்த்தொழுகும் கலாச்சாரம், போலித்தனங்களை மட்டுமே பார்த்தொழுகும் மரபைத் தோற்றுவித்துவிட்டது.


ஆங்கிலேயர்களைப் பார்த்து யாழ்ப்பாணக் கனவான்கள் பார்த்தொழுக முற்பட்டதாலேயே, நமது இனம் இன்றும் அதற்காக மிகப்பெரிய விலையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

நாம் எப்போதும் நாமாகத்தான் இருக்க முடியும். நாம் மற்றவர்களாக இருக்க முடியாது. மற்றவர்களிடத்தில் இருக்கும் நல்ல முன்மாதிரிகளை நாம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், மற்றவர்களாக மற்றவர்களைப் போல், மற்றவர்களைப் பார்த்து வாழமுற்பட்டால் - நாம் நாமாகவும் இருக்க முடியாது; மற்றவர்களாகவும் இருக்க முடியாது. நாம் யாராகவும் இல்லாத சுய அடையாளமே இல்லாத 'வெற்றுப் பேர்வழி'களாகி விடுவோம்.

### அகதி வாழ்வின் அவலங்கள்

## உங்கள் கைவண்ணம்

**செல்வன் குணசீலன் சாம்நாத்**
**வயது: 10 (09.03.1988)**
இடம்: Basel, Swiss.



தமிழீழம் எங்கள் தாய் நாடு
தாய் நாட்டைக் காக்க
புலம் பெயர் தேசத்து மாணவர் நாம்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனத்துடன் இணைந்து
செயற்படுவோம்.




**செல்வி தெ. பிரியந்தா**
**வயது: 11**
இடம்: Yverdon, Swiss

## கூண்டுக் கிளி

நான் இப்போது ஒரு கூட்டில் இருக்கிறேன். முன்பு என் தாயுடன் கூடி வாழ்ந்தேன். ஒரு நாள் நாம் இரை தேடிச் செல்லும் போது பாலன் என்றொரு வேடுவன் வலை கொண்டு வந்தான்.

'என்னோடு வந்த நண்பர்கள் எல்லோரும் பறந்து விட்டார்கள். நானும் பறக்க முயற்சிக்க பாலன் வலை வீசி பிடித்து விட்டான். நான் அகப்பட்டுக்கொண்டேன். இப்போது கூட்டில் இருந்து கத்துகிறேன். அவர்கள் எனக்கு பழங்கள் தருவார்கள். நான் அவற்றை சாப்பிட்டு விட்டு இருப்பேன். ஆனாலும் என் தாய், தந்தை, நண்பர்கள் கதைக்க நானும் சேர்ந்து கதைக்க வேணும் போல் தோன்றுகிறது. நான் கூட்டில் இருந்து கத்துவேன் இந்த உலகத்தில் யாரை தேவையென்றால் நீங்கள் எனக்கு உதவி செய்கிறீர்களா? நீங்கள் எனக்கு உதவி செய்தால் நானும் உங்களுக்கு உதவி செய்வேன். நான் உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.




## குட்டிக் கதை படியுங்கள்

### பெருமையின் வீழ்ச்சி


சித்தார்த்தன் ஓர் சிறந்த சிற்பி. அவன் உயிருள்ள மனிதர்களைப்போல் சிற்பங்கள், மெழுகுப்பொம்மைகள் செய்வான். அவனது பொம்மைகளுக்கும் உயிருள்ள மனிதர்களுக்குமிடையில் வித்தியாசம் காண்பது கடினம். ஒரு நாள் அவன் நித்திரையின் போது ஓர் கனவு கண்டான்.

அதில் தான் இன்னும் பத்து நாட்களில் இறக்கப்போவதை அறிந்தான். உடனே அவனது மூளை விழித்துக்கொண்டது. அவன் தன்னைப் போலவே உருவுடைய பத்துப் பொம்மைகளைச் செய்தான். பத்தாம் நாள் பொம்மைகளின் நடுவேயென்று ஆடாது அசையாது நின்றான். எமனின் தூதுவர்கள் அவனைக்கொல்ல வந்தனர். வந்தவர்கள் ஏதும் புரியாது மீண்டும் விண்ணுலகம் சென்று எமனிடம் முறையிட்டனர். எமன் தானே நேரில் வந்தவன் திகைத்தான்.

எமன் சிந்தித்தான் 'சித்தார்த்தன் நீ பொம்மைகளைச் செய்யும்போது ஒரு தவறு செய்து விட்டாய் அது உன்னைக் காட்டிக்கொடுத்து விட்டது' என்றான். அதைக்கேட்ட சித்தார்த்தன் வெளியே வந்து, கோபத்துடன் 'எனது பொம்மையில் என்ன தவறு கண்டாய். நானாவது தவறு விடுவதாவது' என்று தற்பெருமையுடன் கூறினான். எமன் சிரித்தபடி சித்தார்த்தனைப் பார்த்து 'உனது தற்பெருமைதான் நீ விட்ட பெரும் தவறு' என்றான்.

**இதை எழுதி அனுப்பியவர்:**
**செல்வன் சிவநாதன். ஜெயந்தன்**
வயது 11
ஆண்டு 5
துர்க்கா தமிழ் வித்தியாலயம்.
Frauenfeld, Swiss

## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்





யார் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனிடம் செல்கிறார்?

1- வசந்தி
2- கலா
3- செல்வன்
4- சாந்தன்
5- தயா
6- கேதி
7- சந்திரன்
8- பாமா

**தயாரித்தவர்:**
செல்வி துஷி தியாகராஜா
வயது: 13 (20.03.1986)
இடம்: பாசல், சுவிஸ்



*விடை அடுத்தவாரம் வெளிவரும்.*

## வாரம் ஒரு சோலை

புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கும் தமிழ் பாடசாலைகளில் இருந்து 'வாரம் ஒரு பாடசாலை' என்ற வகையில் புகலிட தமிழ் சிறார்களின் பல்வேறு ஆக்கங்களையும் புகைப் படங்களையும் சுமந்துகொண்டு சிறுவர் முற்றம் பவனிவரவிருக்கிறது. உங்கள் பாடசாலைச் சிறார்களின் ஆக்கங்களை சிறுவர் முற்றத்தில் உலாவிடச் செய்ய விரும்பும் பாடசாலை பொறுப்பாளர்கள் அல்லது அமைப்புகள், கீழ் உள்ள படிவத்தை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை பெயர்: ..............................

முகவரி: ..............................

தொலைபேசி இல: ..............................

சிறுவர் முற்றத்தில் வாரம் ஒரு சோலையில் எமது பாடசாலை சிறார்களைப் பங்கு கொள்ளச் செய்ய விரும்புகிறேன்.

திகதி: ....................

..............................
ஒப்பம் பொறுப்பாளர்

## விடுமுறை நாட்கள்

பிள்ளைகளே!

உங்கள் விடுமுறை நாட்களை எப்படிக் கழித்தீர்கள்? உங்கள் விடுமுறை அனுபவங்களை அறிந்து கொள்வதற்கு சிறுவர் முற்ற நண்பர்களும் ஆவலாக உள்ளனர். உங்கள் சுற்றுலா பற்றிய அனுபவத்தையும் புகைப்படத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிந்தால் சுற்றுலா பயணத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இருப்பினும் அதனை அனுப்பி வைக்கவும். உங்கள் சுற்றுலா அனுபவம் சிறுவர் முற்றத்தில் உலா வருவது உங்களுக்கு மகிழ்ச்சிதானே!

# நாட்டுப்புற நம்பிக்கைகள்

நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக்கொள்வதாகும். நம்பிக்கைகளின் அடிப்படை மனிதனின் அடிமனம் (Sub consciousness) என்பர். மூளைக்கு அகப்படாத காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை உணர்த்துகிறது. மூளையில் பதியும் அவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படும் போது நம்பிக்கையாகிறது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்நம்பிக்கைகள் மனித வாழ்வில் மிக இன்றியமையாதது என்பார் ஜேம்ஸ் வின்செஸ்டர் (James winchester).

நாட்டுப்புற மக்கள் தம் வாழ்வில் கொண்டுள்ள நம்பிக்கை எண்ணற்றவை. அவைகளைப் பகுத்துப் பார்ப்பது மிகப் பயனுள்ள ஒன்றாகும்.

## நம்பிக்கைகளின் தோற்றம்

மனிதனிடம் நம்பிக்கைகள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள. நாட்டுப்புற நம்பிக்கைகளுக்கு மூவகைக் காரணங்களை உரைக்கலாம். ஒன்று செய்வினை எனப்படும் மந்திரம் (Magic). இரண்டு, நாட்டுப்புற மருத்துவம் (Folk medicine), மூன்று, விலக்குகள் (Taboos). இச்செய்வினை, மருத்துவம், விலக்கு ஆகியவற்றின் ஆதிக்கம் குறைந்தபோது அவை பற்றிய நம்பிக்கைகள் நாட்டுப்புற நம்பிக்கைகளாக எஞ்சுகின்றன.

ஒருவரது பழந்துணியை இரவல் கொடுக்கக் கூடாது என்ற நம்பிக்கையானது, பழந்துணியின் மூலம் அதற்குரியவருக்குத் தீவினை செய்யமுடியும் என்ற செய்வினை மூலம் தோன்றியிருக்க வேண்டும்.

## நம்பிக்கைகளின் தன்மை

ஆலன் டெண்டிஸ் (Alan dundes), நம்பிக்கைகளின் தன்மையை ஆராயும்போது 'A இருந்தால் B வரும் C இல்லாவிட்டால் இல்லை' என்ற வாய்பாட்டினை அமைத்துள்ளார். அதாவது இது செய்தால் இது நடக்கும்; இதைச் செய்தால் இதை நீக்கலாம் என்பதுவே அதன் பொருள். கண்ணேறு பட்டால் நோய் வரும். நோய் நீங்க சிவிக்காரத்தைத் தடவி நெருப்பில் போடவேண்டும்.

ஒவ்வொரு நம்பிக்கைகளிலும் A, B, C எனும் மூன்று பகுதிகள் உள. பெரும்பாலும் இம்மூன்று பகுதிகளில் ஒன்று தொக்கி நிற்பதும் உண்டு.

இந்நம்பிக்கைகள் எழுதப்படாதவை, இவற்றை வழி வழியாக மக்கள் தம் வாழ்வில் நம்பி வருகின்றனர். இந்நம்பிக்கைகள் முதியவர்களால் வற்புறுத்தப்படுகின்றன.

## நம்பிக்கைகளின் வகைகள்

நம்பிக்கைகள் பல்வேறு வகைப்படும். மக்கள் தம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் நம்பிக்கைகளை நழுவ விடாமல் காப்பாற்றி வருகின்றனர். 'நம்பினோர் கெடுவதில்லை' என்பது தான் இவர்களின் பெரும் நம்பிக்கையாகும்.

நியாயமானவை, மூடத்தனமானவை என்று இருவகைகளாக நம்பிக்கைகளைப் பகுத்துக் கொள்ளலாம். பத்தாவது பெண் நல்லதல்ல என்ற நம்பிக்கை இட்டவிடாத குடும்பம் அழிந்து விடும் என்ற அடிப்படை என்றாலும், நியாயமானது, காக்கை கத்தினால் விருந்து வரும் என்பது அறிவியல் பூர்வமான உண்மையாக அமையாததால் மூட நம்பிக்கையாகும்.




இவற்றின் பொருள் அடிப்படையில் மக்களின் உணவு, உடை, பிறப்பு, திருமணம், சகுனம், கனவு, வழிபாடு, இறப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் நம்பிக்கைகள் நிலவி வருகின்றன.

**★ மூலம் அரசாளும்.**

**★ சாமியைக் கைகட்டிக் காட்டினால் கண்ணை அவித்து விடும்.**

**★ ஞாயிறு வெளியூருக்குச் செல்லலாகாது.**

### 1. உணவு தொடர்பானவை

1. சாப்பிடுகையில் கால்களைக் கையால் பிடிக்கக் கூடாது.
2. உணவு சிந்தக் கூடாது.
3. குசு விடக்கூடாது.
4. படிக்கக் கூடாது.
5. இலையைத் தாண்டக்கூடாது.

### 2. உடை தொடர்பானவை

1. தாண்டக் கூடாது.
2. கிழிந்த உடை அணியக் கூடாது.
3. கோவிலில் சட்டை போடக்கூடாது.
4. ஆடையைக் கடிக்கக் கூடாது.

### 3. குழந்தை தொடர்பானவை

1. குழந்தைக்குக் கண்ணேறு கழித்தல்.
2. குழந்தைகளைத் தலையில் அடிப்பது தவறு.
3. கொடி சுற்றிப் பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது.
4. மூலம் அரசாளும்.
5. குழந்தைகளைத் தாண்டக் கூடாது.
6. குழந்தைகளுக்குக் கண்ணாடி காட்டினால் ஊமையாகும்.

### 4. திருமணம் தொடர்பானவை

1. இரு திருமணங்கள் ஒரு வீட்டில் நடந்தால் ஒன்று சிறக்கும், ஒன்றுதாழும்.
2. திருமணச் சடங்குகளில் சுமங்கலிகள் மட்டுமே பங்குகொள்ள வேண்டும்.
3. திருமணம் முடிந்து வருகையில் பிறந்த வீட்டிலிருந்தும், சிகைக்காய் பொடி, மிளகாய்ப்பொடி ஆகியவற்றைக் கொண்டு வருவது தவறு.

### 5. சகுனங்கள் தொடர்பானவை

1. காக்கை கத்தினால் விருந்து.
2. பூனை தடை தீய சகுனம்.
3. நரி தடை நல் சகுனம்.
4. 'எங்கே போகிறாய்' என்று கேட்டால் தீய சகுனம்.
5. கழுதை கத்தினால் நல் சகுனம்.
6. மொட்டைச்சி வந்தால் தீய சகுனம்.

### 6. கனவுகள் தொடர்பானவை

1. பகல் கனவு பலிக்காது.
2. அதிகாலையில் காணும் கனவு பலிக்கும்.
3. கனவில் மரணம் என்றால் சுபம், திருமணம் என்றால் இழவு.
4. கனவில் மலத்தைத் தொட்டால் பணம் வரும்.

### 7. வழிபாட்டுத் தொடர்பானவை

1. சாமியைக் கைகட்டிக் காட்டினால் கண்ணை அவித்து விடும்.
2. சாமி இருக்கும் திசையில் கால் நீட்டக் கூடாது.
3. சாமிக்குப் போட்ட பூவை அடுப்பில் அல்லது ஆற்றில் போடவேண்டும்.
4. சாமிக்கு முன்னால் செருப்பு போடக்கூடாது.
5. கோவில் நேர்ச்சைகள் தவறக்கூடாது.

### 8. பெண்கள் தொடர்பானவை

1. மாத விலக்கான பெண் பூ வைக்கக் கூடாது.
2. பெண்கள் இரவில் அழக்கூடாது.
3. பெண்களின் தலைமயிர் முழங்காலுக்குக் கீழே வளரக்கூடாது.
4. பெண்கள் இரவில் மல்லாந்து படுக்கக்கூடாது.

### 9. இறப்பு தொடர்பானவை

1. சவ ஊர்வலத்திற்கு எதிராகச் செல்லக்கூடாது.
2. சனி பிணம் துணை தேடும்.
3. புதன் கிழமை சாவு நல்லது.
4. மரண நாளில் மழைபெய்வது நல்லது.
5. மரணவீட்டிற்குச் சென்றுவந்த பின்னர் குளிக்காமல் இருக்கக் கூடாது.

### 10. நாள் தொடர்பானவை

1. செவ்வாய் அமங்கல நாள்.
2. செவ்வாயில் முடிவெட்டுதல் வறுமை தரும்.
3. செவ்வாயும், வெள்ளியும் தையல் கூடாது.
4. சனியில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் நல்லது.
5. ஞாயிறு வெளியூருக்குச் செல்லலாகாது.
6. புதன் பணம் கிடைப்பது நல்லது.
7. வெள்ளியன்று கடன் கொடுக்க மாட்டார்கள்.

நாட்டுப்புற நம்பிக்கைகள் கிராமத்து மக்களுக்கு மட்டும் உரியனவாக விளங்காமல் நகரத்து மக்களிடையேயும் இருக்கின்றது.

*நன்றி. 'தூங்கில் இலை மேலே'*

பொதுவாக இம் மூட நம்பிக்கைகளை மண் விடுதலைக்கும் பெண் விடுதலைக்கும் தடையாக இருக்கின்றன, என்பது வலுவான கருத்தாகும்

(-ஆர்)

---

## நாற்று

இளம் ஆக்கங்கள்

# அழும் ஆன்மாவிலிருந்து எழும் குரல்.....

இனியவனே...,
இந்த அழுகின்ற ஆன்மாவிலிருந்து
எழுகின்ற குரல்.....
உனக்கு கேட்கின்றதோ.....
இல்லையோ.... கேட்க வேண்டும்
என்பதற்காகவே அழுகின்றேன்!

நீ.... இப்போது
களத்தில் நிற்கின்றாயோ.....
கல்லறையில் உறங்குகின்றாயோ.....
எனக்கு தெரியாது — இருந்தும்
அழுகின்றேன்!

நண்பனே.....
இங்கே என்னுள்ளேயே
என்னை தேடுகின்றேன்.....
'முகம்' தொலைந்து விட்டு திரியும்
பலருடன் — நானும்
போலி முகத்துடன் அலைகின்றேன்
உனக்கு வாழ்க்கையில்
'அவலம்' இருக்கலாம் — ஆனால்
எனக்கு அவலங்களே
வாழ்வின் விதியாகிவிட்டது.....
இருந்தும் நான் உலவுகின்றேன்.
மனிதனாக அல்ல.....
மரத்து போன மிருகமாக!

ஆனால்.....
எந்தன் 'மண்பாசனை' நினைவுகள்
மட்டும் நெஞ்சை விட்டு அழியவில்லை.....
அந்த 'ஊர் கனவுகள்' மட்டுமே.....
என்னை உயிர்புடன்
வைத்திருக்கின்றது!
என் மண் எவ்வளவு அழகானது.....
எத்தனை அலாதியானது.....
உன் வீட்டு ஒழுங்கையில் நின்ற
'வேப்பமரம்'.....
சாலை மருங்கில் பாயும்!
'வாய்க்கால்'
'பட்டாடை' போர்த்திய நிலமகள்
கரை வந்து மோதி கதை பல
பேசும் .....'கடலன்னை'
அப்பப்பா.....
எத்தனை அழகானது என்மண்!!

நண்பனே.....
விரைவில் ஊர் வருவேன்.....
அந்த புழுதி மண்ணை அள்ளி
மேனியில் பூசுவேன்..... புரள்வேன்.....
கூத்தாடுவேன்.....
அங்கு வந்து.....
செத்துப் போகும் வரை
உங்கள் 'சேவடிகள்' போற்றி
நிற்பேன்.....

— சோ. மதீஷன்


# ரவி வாகனசேவை




உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள்
தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது
ஜவ்னா இறைச்சிக்கடை

# ஜவ்னா இறைச்சிக்கடை

ஆடு, மாடு, கோழி
இறைச்சி
வகைகளையும்,
தினமும் உயிர்க்கோழி
வகைகளையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்





திங்கட்கிழமைகளில் சுபியப்பன் மளிகை
நிறுவனத்தில் எல்லா இறைச்சி
வகைகளையும் ஓடர் செய்துகொள்ளலாம்

## Jaffna Boucherie

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்



# கப்டன் கஜன் அரங்கில்

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்
வழங்கும்

# விடுதலை மாலை

இது விடியலைத் தேடி... சுதந்திரக் காற்றை
சுவாசிக்க... அவாவி நிற்கும் எம் மக்களின் விடுதலை
உணர்வுகளை சுமந்து வரும் மாலை...
தலைகுனியா பச்சைவயல் வெளியினை... மண்டியிடா
மண்முகரும் அலைகடலினை... உரசிவரும்
ஊர்க்காற்றை சுவாசிக்கும்

## விடுதலை மாலை

பிரான்ஸ் வாழ் தமிழீழ
மக்களை அழைக்கின்றோம்

23.08.98 ஞாயிறு பிற்பகல் 5.30 மணி

Théâtre du Gymnase
38, Bld. Bonne Nouvelle, 75010 Paris.
(M°:Bonne Nouvelle)
மேலதிக தொடர்புகளுக்கு: 01 43 58 11 42



சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 42 நிமிடம்
பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை)

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 42 நிமிடம் | பிரித்தானியா | 120 நிமிடம் |
| கனடா | 120 நிமிடம் | அமெரிக்கா | 120 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் | ஜேர்மனி | 100 நிமிடம் |
| ஹொங்கொங் | 62 நிமிடம் | அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 40 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 65 நிமிடம் |
| சுவிஸ் | 100 நிமிடம் | மொரோக் | 65 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் | பெல்ஜியம் | 100 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | |
| துனிசியா | 65 நிமிடம் | | 80 நிமிடம் |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

சகல நாடுகளுக்குரிய
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.


## GNANAM Telecom Center

195, Rue du Fg. Saint Denis, 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord

# ஜேர்மனியில் இடம் பெற்ற மாபெரும் விளையாட்டுப்போட்டி

## புகலிட நிகழ்வுகள்

[illegible]



ஜேர்மனி டோட்முண்ட் நகரில் பெருந்தடகள விளையாட்டு மைதானத்தில் தமிழ்மாணவர் அமைப்பின் ஆறாவது மாவீரர் வெற்றிக் கிண்ணப்போட்டிகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. மெய்வல்லுனர் உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகளுடன் அணி நடைப் பயிற்சி, மூப்பவைகளும் பாவையைம், சங்கீதக் கதிரை, கயிறிழுத்தல் ஆகிய போட்டிகளும் இடம்பெற்றன. விளையாட்டுப்போட்டிகளை படங்கள் இங்கே எடுத்துக்காட்டுகின்றன.



உலகத் தமிழர் இயக்க ஜேர்மனி கல்விப்பணியின் கீழ் இயங்கும் தமிழாலயங்களில் 8 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களில் கட்டாட் தமிழாலய மாணவர்கள் முதலிடத்தைப்பெற்றனர். மாவீரர் வெற்றிக்கிண்ணம் பெற்ற காசிப்பில் கட்டாட் மாணவர்கள்

போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு தமிழ் மாணவர் அமைப்பு அங்கத்தினர்கள் தமிழீழ விடுதலை புலிகளின் ஜேர்மனிப்பொறுப்பாள இளம்பரிதியுடன் காணப்படுகின்றனர்.




ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் உணவுச்சாலை விளையாட்டு மைதானத்தில் போடப்பட்டிருந்தது

பார்வையாளரைக் கவர்ந்த சங்கீதக் கதிரைப்போட்டி




உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியன் பட்டத்தைப் பெற்ற எசன் தமிழர் விளையாட்டுக் கழகம்.






ஓட்டப் போட்டியில் விறுவிறுப்புடன் கலந்து கொள்ளும் மாணவர்கள்



அணி நடைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள வீழுப்புற்றால் தமிழாலய ஆண்கள் அணி



தமிழாலய மாணவர்கள் 12 வயதிற்குக் கீழ் உள்ளோர் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்கின்றனர்.



விளையாட்டுப்போட்டியைக் காணவந்திருந்த கூட்டத்தினரில் ஒரு பகுதி

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மனிக்கிளை
நடாத்தும்

# விடுதலை கானம்பாடி - 1998

## சிறந்தபாடகர் தெரிவுப்போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மனிக்கிளை வருடாவருடம் நடாத்தும் 'விடுதலை கானம்பாடி' சிறந்தபாடகர் தெரிவுப்போட்டியின் 1998ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பங்குபற்றுவோருக்கான விதிகள்**

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடற் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இசைக்குரற்பாடற்போட்டி, தனிக்குரற்பாடற்போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்து, தனிக்குரற்பாடற்போட்டி நடாத்தப்படும்.
   **மேற்பிரிவு: 31.12.1984 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**
   **கீழ்ப்பிரிவு: 01.01.1985 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.**
5. இசைக்குரற் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இசைக்குரற்பாடலாக இருத்தல் வேண்டும்.
6. முதற்சுற்றுப் போட்டியிற் தெரிவான பாடகர்கள் இறுதிப்போட்டிக்கு அழைக்கப்படுவர்.
7. **விண்ணப்பக் கட்டணமாக 75.00 DM செலுத்தப்பட வேண்டும்.**
   T.R.O., Deutsche Bank Monchegladbach,
   Konto: 7360217, BLZ: 31070001, என்னும் வங்கி இலக்கத்துக்கு பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டுப்பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
8. **விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி: 31.08.98.**
9. விண்ணப்பம் செய்யவேண்டிய முகவரி:
   **E. Anandarajah**
   **Tamilische Rehabilitations Organsation**
   **Hompesch Str. 16,**
   **41189 Monchengladbach.**

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*தமிழர் புனர்வாழ்வுக்கழகம் — ஜேர்மன் கிளை*

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மனிக்கிளை
நடாத்தும்

# விடுதலை கானம்பாடி - 1998

## சிறந்தபாடகர் தெரிவுப்போட்டி
### விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரின் முழுப்பெயர்: ..................................................
2. பிறந்த நாள்: ..................................................
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்: ..................................................
4. முகவரி (ஜேர்மன் மொழியில்): ..................................................
5. தொலைபேசி எண்: ..................................................
6. பங்குபற்றும் போட்டி: தனிக்குரற் பாடற்போட்டி / இசைக்குரற் பாடற்போட்டி
7. தனிக்குரற்போட்டியாளரின் பங்குபற்றும் பிரிவு: மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு
   பாடவிரும்பும் தனிக்குரற்பாடலின் பெயர் 1 ..................................................
   இடம் பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................
   பாடவிரும்பும் தனிக்குரற்பாடலின் பெயர் 2 ..................................................
   இடம் பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................
8. இசைக்குரற்போட்டியாளரின் இணைந்து பாடுபவர் பெயர்: ..................................................
   முகவரி: ..................................................
   பாடவிரும்பும் இசைக்குரற் பாடலின் பெயர்: 1 ..................................................
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................
   பாடவிரும்பும் இசைக்குரற் பாடலின் பெயர்: 2 ..................................................
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................

**நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேனென்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.**


| பாதுகாவலர் கையொப்பம் | போட்டியாளர் கையொப்பம் |
|---|---|
| 1. ------------------------ | ------------------------ |
| 2. ------------------------ | ------------------------ |

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஜேர்மன் கிளை





# எங்கும் கிடைக்கிறது







*Marketed & Distributed*

**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





## சகோதரிகள்

திருமதி வி.ராஜலட்சுமி — தோற்றம்: 27.12.1954 — மறைவு: 30.08.1997

திருமதி வ.ராஜேஸ்வரி — தோற்றம்: 31:03:1967 — மறைவு: 30.08.1997

(வல்வெட்டித்துறை)

நீங்கள் எங்களையெல்லாம் விட்டு அகால மரணம் அடைந்து இன்றுடன் ஓராண்டு காலம் முடிவடைந்தன. உங்கள் நினைவிலும் துன்பத்திலும் துயரத்திலும் வாழும் அன்புத்தாய், கணவன்மார், தமையன்மார், மக்கள், சகோதரங்கள்.

வேல்முருகு விஜயகுமார் (கணவன்)

ஏகாம்பரம் வணசிங்கம் (கணவன்)

வி.ரவிகுமார், வி.சிவகுமார் } மகன்கள்

வ.பிருந்தா (மகள்)

அன்புத்தாய், சகோதரங்கள்

சுந்தரமூர்த்தி தெய்வானைபிள்ளை

சு. ராஜரத்தினம்

சு. ராமச்சந்திரன்

சு. ராஜகுமார்

சு. ராஜசிங்கம்

சு. ராஜவேல்

ஒருவருட நினைவஞ்சலிகள் திருச்சியில் — சு.ராமசந்திரன் இலக்கம் 14, 1ம் குறுக்குத் தெரு, அசாத்நகர், திருச்சி — 21, இந்தியா என்ற முகவரியில் 19.08.1998 அன்று இடம்பெறும்.

# ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு - 2

புகலிட நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ் தேசியப் பத்திரிகை என்ற வகையில் ஈழமுரசு தன்னுடைய (வாசகர்) பாதையில் தனது பணியை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்காக வாசகர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்துவதற்கு முன்வந்திருக்கிறது. ஈழமுரசின் வளர்ச்சியிலும் அதனுடைய வருங்காலத்திலும் அக்கறை கொண்ட அனைத்து வாசகர்களும் இந்தக் கருத்துக் கணிப்பில் இயன்றவரை பங்கெடுத்து ஈழமுரசு முகவரிக்கு இந்தப் படிவத்தை அனுப்பி வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். - ஆர்

1. நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா? ஆம் ☐ இல்லை ☐ (ஆம் எனில் சந்தா இல.---- ----)
2. சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?
   வாரந்தோறும் ☐ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ☐ ஒரு மாதம் மட்டும் ☐ எப்போதாவது ☐
3. ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?
   1/2 மணி நேரம் ☐ 1 மணிநேரம் ☐ 2 மணிநேரமும் ☐ அதற்கு மேலும் ☐
4. கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப்படித்து வருகின்றீர்கள்?

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதேயில்லை |
|---|---|---|---|
| சமையல் | ☐ | ☐ | ☐ |
| சினிமா | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை | ☐ | ☐ | ☐ |
| பெண்கள் | ☐ | ☐ | ☐ |
| சிறுவர் | ☐ | ☐ | ☐ |
| தொடர்கதை | ☐ | ☐ | ☐ |
| தொடர் கட்டுரை | ☐ | ☐ | ☐ |
| அறிவு / தகவல் | ☐ | ☐ | ☐ |
| அருமைத்தம்பி | ☐ | ☐ | ☐ |
| [illegible] | ☐ | ☐ | ☐ |
| நடைபாதைக் குறிப்பு | ☐ | ☐ | ☐ |
| கேள்வி பதில் | ☐ | ☐ | ☐ |
| நாற்று | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு | ☐ | ☐ | ☐ |
| புகலிடம் | ☐ | ☐ | ☐ |
| அரசியல் பார்வை | ☐ | ☐ | ☐ |
| [illegible] | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம் | ☐ | ☐ | ☐ |
| அரசியல் ஆய்வுகள் | ☐ | ☐ | ☐ |

5. ஈழ முரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன. அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?

| | செய்திகள் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம் | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| இந்தியா | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| தமிழீழச் செய்தி | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| யாழ் செய்தி | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| உட்பக்க செய்தி(பொது) | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| முன்-பின் பக்கங்கள் | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

6. நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?
   - செய்திகளுக்காக ☐
   - இலங்கை அரசியல் ஆய்வுகளுக்காக ☐
   - இலக்கியப் பக்கங்களுக்காக ☐
   - வேறு விடயங்களுக்காக ☐ (விபரம் குறிப்பிடவும்)
7. நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?
   - ★ தலைப்பு செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ☐
   - ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப் பத்திரிகையில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ☐
   - ★ ஈழமுரசின் நல்ல விடயங்கள் குறித்து நண்பர்கள் சிபார்சு செய்ததனால் ☐
8. ஈழமுரசில் இடம்பெறும் கலந்த சொற்கள் சொற்பிரயோகம், உங்களுக்கு திருப்தியளிக்கிறதா? ஆம் ☐ இல்லை ☐
   இல்லையென்றால் காரணம் ........................................
9. ஈழமுரசின் கீழ்வரும் அம்சங்களில் உங்கள் கருத்தை குறிப்பிடுங்கள்

| | மிகச் சிறந்தது | நன்று | மோசம் |
|---|---|---|---|
| ஒட்டு மொத்த உள்ளடக்கம் | ☐ | ☐ | ☐ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும் | ☐ | ☐ | ☐ |
| கட்டுரைகளின் பொருத்தமும் உள்ளடக்கமும் | ☐ | ☐ | ☐ |
| பத்திரிகையின் வடிவமைப்பு | ☐ | ☐ | ☐ |
| முன்பின்பக்க வடிவமைப்பு | ☐ | ☐ | ☐ |
| பத்திரிகையின் ஆவணப்பயன்பாடு | ☐ | ☐ | ☐ |

10. உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளை கேட்கும் வாய்ப்புண்டா?
    ஆம் ☐ இல்லை ☐
11. ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐
    விரும்பினால் - எந்தமாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடவும் ........................................
    ........................................
12. ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள்... ........................................
    ........................................

பெயர்: ........................................
ஆண் ☐ பெண் ☐
முகவரி: ........................................
........................................
.................... நாடு ....................
தொலைபேசி இலக்கம்: ....................
தொலைநகல் இலக்கம்: ....................

வயது: 25 க்கு கீழ் ☐ 25-35 வரை ☐ 35 க்கு மேல் ☐

உங்களது வதிவிட நிலை
அகதி அந்தஸ்து பெற்றவர் ☐
தற்காலிக வதிவுரிமை பெற்றவர் ☐
வதிவிட அனுமதிப் பத்திரமின்றி இருப்பவர் ☐

ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்

# மூன்று தடவை தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டும் தூக்கிலிருந்து தப்பிய கைதி

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட யோன் லீ என்பவர் அதிலிருந்து தப்பி சாதாரணமாக வாழ்க்கை நடத்திய ஒரு கதை இதுவாகும். யோன் லீ என்பவரை யாராலும் தூக்கிலிட முடியவில்லை. அவரின் கதை சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளது.

1885-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி எக்ஸ்சிரா (Exeter) என்ற இடத்தில் உள்ள சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட யோன் லீ என்பவருக்கு அங்கு புதிதாக அமைக்கப்பட்ட தூக்குத்தண்டனை (Scaffold) கொடுக்கும் இடத்தில் மூன்று தடவை முயன்றும் அவரைக் கொல்ல முடியவில்லை. அப்போது 19 வயதாகிய யோன் லீ தூக்குத் தண்டனையிலிருந்து விடுபட்டு இறக்கும் வரை ஜெயில் சிறையில் இருந்து வந்தார். 22 வருடங்கள் கழிந்து அதிஷ்டவசமாக சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு அமெரிக்காவிற்கு சென்று அங்கு வாழலானார்.

அந்தச் சிறைச்சாலையில் உள்ள தூக்கிலிடும் இடம் புதிதாக அமைக்கப்பட்டபோது அங்குள்ள சிறைக் கைதிகளின் உதவியுடன் அமைக்கப்பட்டது. அவர்கள் தங்களைப் போல் அங்கு வர இருக்கும் கைதிகட்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால், அவர்களை அதிலிருந்து தப்ப வைப்பதற்காக, அங்கு பொருத்தப்பட்ட பலகையுடன் இன்னுமொரு பலகையை அதன் கீழ் வைத்துப் பொருத்தி விட்டார்கள். பொருத்தப்பட்ட பலகையில் போதகர் (Chaplain) ஒரு திருமறை போதுதான் தூக்குத் தண்டனை அமைப்பவர் போதும் கைதியும் தனது இடத்தில் நிற்பார். அதே நேரத்தில் தூக்குத் தண்டனை விதிப்பவர் லீவர் பிடிக்கும் இடத்தில் பிடித்து இழுக்கும் போது தான் கைதி நிற்கும் பலகை திறக்கப்பட்டு அவருக்குத் தகுந்த தண்டனையும் கிடைக்கும். அந்த இடத்தில் ஒரு இல்லாது பொறியியலாளர் பல தடவைகள் பரிசோதனை செய்தபோது கைதி நிற்கும் இடத்தில் உள்ள கதவு திறக்கப்பட்டது. அதனால் யாருக்கும் சந்தேகம் வரவில்லை. ஒரு நிற்கும் போது அவர் பலகையின் கீழ் இன்னுமொரு பலகை பொருத்தப்பட்டிருந்தது யாரும் அறியாத காரணத்தினால் ஒரு அதன்மேல் நிற்கும்போது அதன் அழுக்கம் மற்றைய பலகையை திறக்காது தடை செய்தபடியால் தூக்குத் தண்டனை கிடைக்காது கைதி தப்பினார்.

சிறையில் உள்ள சில கைதிகளின் உதவியினால் யோன் லீ தண்டனையிலிருந்து விடுபட்டார். இங்கு பரிசோதனை செய்த பொறியியலாளரின் தவறு யோன் லீக்கு சாதகமாக அமைந்துவிட்டது.

– கவிதா –

**வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்**

# பறக்கும் விமானத்திலிருந்து காப்பாற்றப்பட்ட விமானி

1942-ம் ஆண்டு டிசெம்பர் மாதம், அமெரிக்க விமானம் ஓட்டி ஒருவரும், ரொறொன்ரோ கனடாவைச் சேர்ந்த 20 வயதுடைய கரி கிறிபித்ஸ் (Harry Griffiths) என்பவரும் கொன்யர் கொமர்ஸ் என்னும் விமானத்தை ஓட்டிச் சென்றனர். கனடாவிலுள்ள கியூபெக் (Quebec) மாநிலத்தினுள் சென்று அதன் நிலத்தை மேலாக 7000 அடி உயரத்தில் அந்த விமானம் பிரயாணிகள் யாரும் இல்லாது பறந்து கொண்டிருந்தது. அப்பொழுது விமானத்தில் உள்ளே சென்று எல்லா இடத்தையும் பார்வையிடுவதற்காக கரி கிறிபித்ஸ் எழுந்து உள்ளே சென்றார். அவர் அவ்வாறு பார்த்துவிட்டு திரும்பும்போது விமானத்தின் வெளிப்புற கதவு சரியாக பூட்டப்படாது இருந்த காரணத்தினால் கதவின் அருகே கால் வைத்தபோது கதவும் திறக்கப்பட்டுவிட்டது. கரி கீழே விழுந்தபோது அதிஷ்டவசமாக கதவைக் கையால் பிடித்தபடியால் கீழே விழவில்லை. ஆனால் பறந்துகொண்டிருக்கும் விமானத்தில் வெளியே தொங்கிய வண்ணம் பெரிய சத்தமிட்டு தன்னைக் காப்பாற்றும்படி கதறினார்.

அவரது நண்பரான 29 வயதுடைய சிட் கிரோ (Sid Gerow) என்ற அமெரிக்க பைலெட் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்துப்போய் தனது நண்பனைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற வேதனையுடன் தன்னால் முடிந்த அளவு விமானத்தின் வேகத்தைக் குறைத்து ஒரு மணித்தியாலத்திற்கு 100 மைல் வேகத்தில் விமானத்தை கீழே பதித்துக்கொண்டு வந்தார். ஐஸ் கட்டியாக உறைந்திருந்த லேக் ஜோன் ஏரியின் தரையின் மேல் 25 அடி உயரத்தில் பறந்த போது கரி கிறிபித்ஸ் குதித்துவிட்டார். 100 யார தூரத்துக்கு வழுக்கிச் சென்ற கரி அதிர்ஷ்டவசமாக நடுங்கியபோதும் சிரித்து வண்ணம் ஐஸ்லிக்கேஸ் பார்த்திருந்தார். தனது நண்பன் கீழே விழுந்துவிட்டார் என்றறிந்த அமெரிக்க பைலெட் உடனடியாக ஆபத்திலிருந்து காப்பாற்றும் உதவியாளர்கட்கு (Rescul, Team) அறிவித்துவிட்டு விமான நிலையத்திற்கு சென்றுவிட்டார். ஐஸின்மேல் இருந்த கரியை விவசாயி ஒருவர் கண்டு காப்பாற்றினார். கரியின் உடலில் சிறிய காயங்கள் இருந்தபோதிலும் அவர் ஆபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.

இதேபோன்று 1949ம் ஆண்டில் (Eastern airlines) ஈஸ்டேர்ன் விமானத்தின் மேற்பார்வையாளரான (Steward) டக்கோட்டா (Dakota) என்பவர் விமானத்தின் கதவு சரியாக அடைக்காத காரணத்தினால் விமானம் 2500 அடி உயரத்தில் பறந்து கொண்டு இருக்கும்போது கதவு திறபட்டு காற்றின் அழுக்கத்தினால் வெளியே தள்ளப்பட்டு கால் கதவின் இடையில் அகப்பட்டதால் கீழே விழாது தொங்கினார். விமானம் உடனடியாக அவசர நிலையில் தரையிறக்கப்பட்டதும் விமான நிலையத்தில் பணிபுரிந்தோர் அவரை உடனடியாக காப்பாற்றினர். அவர் அதிர்ச்சியடைந்த நிலையில் இருந்தாலும் உயிர்ச்சேதமின்றி காப்பாற்றப்பட்டார். விமானத்தை மேற்பார்வையிடும்போது சரியான முறையில் செய்யாது தவறு செய்ததாலே இவ் ஆபத்துக்கள் வர நேர்ந்தது.



# கலைந்த சொற்கள் எண்: 13

கீழ் உள்ளவற்றில் சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப் பக்கம் இருக்கும். இச் சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | மை | டு | க | தா | ம் | பா | ன | ம் | ம் | ய | கா | ச |
| ரி | ம் | ம் | கோ | ல | ட | ச | ர | ன | ர | கோ | ப் | கு |
| த் | ன | த | ம | பு | கி | க | கு | ச | தி | பா | த | னி |
| தி | ச | ச | ப் | ப் | றை | ச | ர் | ச | த் | தி | ய | ம் |
| த | ரி | டு | பு | க | ர் | வ | ம் | து | மு | தி | ற | தி |
| ம் | த | ப | ச | ச | ம் | த | த | சா | ச | கு | கு | மை |
| பை | ப | ல | ர் | க் | த் | ச் | ந் | கோ | ரி | த | தி | ம் |
| த் | ங் | ப் | பு | ச | ச | வு | த | ச | ல | ன | ம் | ப |
| கை | ப | ப் | ர் | ல | ம் | ர | தி | த் | ச | ணை | இ | ம் |
| ம் | ழி | ச | மு | க | ன் | ச | ம் | சா | ர | ம் | ள | த |
| வி | ந் | ம் | ந் | க | ந் | ச் | ன | ச | ச | ப | மை | க |
| ம | ம் | ன் | ர | தி | ந் | ச | ய | ள | ம் | ன் | ய | ப |
| றை | ந் | த | த் | ரி | ப் | த | ன் | ச | ம | ய | கு | கு |
| வு | ம | த | ந் | த | ச | பு | க | ழி | த | ம | ம | ள |
| ற | ல் | ம் | ம் | ப | ப் | ழ | கு | ம் | ம் | க | மூ | ச |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சக்கரம் | சகோதரன் | சகலமும் | தந்தம் | சுழம் | கரம் | தரகன் |
| சந்தர்ப்பம் | சகிப்பு | சச்சரவு | சிரமம் | சகுனி | தகுதி | குகன் |
| சத்தம் | சத்திரம் | கதம்பம் | பயன் | சந்தித்தல் | சந்திப்பு | சந்திரன் |
| தாபகர் | சப்தம் | சம்சாரம் | சரசம் | திறமை | சபலம் | சடதம் |
| சமயம் | மந்தம் | சரிரம் | சப்பாணம் | சந்தகம் | சம்மதம் | சமூகம் |
| சயனம் | தரிசனம் | சர்வம் | சரணம் | சரித்திரம் | தாம்பாளம் | சப்பாத்து |
| சமுத்திரம் | சலனம் | கடுமை | சமயகுரு | சம்பளி | சகாயம் | பயன் |
| சத்தியம் | சலங்கை | சகுனம் | மறைவு | ரம்பை | இலங்கை | குடும்பம் |
| பந்தம் | விழிப்பு | தடுப்பு | தினம் | | | |

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா இல: ..............................


கலைந்த சொற்கள் எண்-13 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 28.08.98

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

## கலைந்த சொற்கள் எண் - 12 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 230 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) திரு. [illegible]
21435 [illegible]
Germany.

2) A. [illegible]
58000 Nevers.
France.

3) [illegible]
93120 La Courneuve,
France.

4) த. [illegible]
33602 Bielefeld,
Germany.

5) [illegible]
0182 Oslo
Norway.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-13 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-14ம், 03 - 09 செப்டெம்பர் 98 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேயு. சவுந்தரராஜா

10வது ஆண்டில் காலடிபதிக்கும்
# இமாலயாவின்
தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்
100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே
உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
பிரியாணி ❀ கொத்துரொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தன்தூரி வகைகள் ❀ நாண் ❀ சில்நாண் ❀ சப்பாத்தி ❀ சமூசா ❀ ரோல்ஸ் ❀ சோறு - கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
றெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

# சாந்தினி உணவகம்
குதூகலமாக ரம்பிக்கப்பட்டுள்ளது
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை - 9.00 மணி முதல் இரவு - 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துரொட்டி, ரொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு
மகிழ்ந்திட நாம் வேண்டியது
சாந்தினி உணவகம்
Pub

## மீண்டும் உங்கள் திருப்திக்காக

# வூட்லன்ஸ் கோல்

## தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது





**60 UN**

**50 Frs TTC**

**120 UN**

**100 Frs TTC**




| | |
|---|---|
| இந்தியா................... | 46 நிமிடங்கள் |
| இலங்கை ................ | 40 நிமிடங்கள் |
| ஐரோப்பா................... | 70 நிமிடங்கள் |
| பிரித்தானியா.......... | 100 நிமிடங்கள் |
| அமெரிக்கா............ | 100 நிமிடங்கள் |
| கனடா.................... | 100 நிமிடங்கள் |

இன்று பல நாடுகளுக்கும் மிகக்குறைந்த விலையில் அதிக நிமிடத்துடன் தெளிவான தொனிவுடன் உரையாடுவதற்கு பாரிசில் முன்னனி தொலைபேசி அட்டையான Woodlands Call வாங்கி ஓர் முறை பேசிப்பாருங்கள்!

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 15% கழிவுடன் வழங்கப்படும்

| | Local | Vert |
|---|---|---|
| இந்தியா | 46 | 30 |
| இலங்கை | 45 | 30 |
| UK | 100 | 30 |

## ஒரு மாத விலைகுறைப்பு

நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!

தொடர்புகளுக்கு: வூட்லன்ஸ் உணவகம்

**207, Rue Fg. St. Denis, 75010 Paris.**

**Tel: 0140370820 / Fax: 0140372820**

மிக விரைவில் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

**விநியோகத்தர்கள் தேவை**

**அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்**

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.80 | 0.62 | 6.02 | 1.50 |
| பிராங்பேட் | 0.55 | – | 0.34 | 3.35 | 1.19 |
| லண்டன் | 1.62 | 2.91 | – | 9.77 | 2.43 |
| பாரிஸ் | 0.16 | 0.30 | 0.10 | – | 0.25 |
| சூரிச் | 0.66 | 1.19 | 2.43 | 4.00 | – |
| பம்பாய் | 42.99 | 23.90 | 69.58 | 7.18 | 28.52 |
| கொழும்பு | 66.22 | 36.82 | 108 | 10.98 | 43.94 |

# கிழக்கில் வாந்திபேதி பத்துப்பேர் பலி!

கிழக்குப் பகுதிகளில் வாந்தி பேதி நோய் வேகமாகப் பரவி வருவதால் இதுவரை பத்துப் பேர் பலியாகியுள்ளனர். மேலும் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூதூருக்கண்மையாக உள்ள பள்ளிக்குடியிருப்பு, மூன்றாம் கட்டை, பெரும், மேன் காமம், [illegible] வெளி ஆகிய கிராமங்களிலேயே வாந்திபேதி நோய் தற்போது மிக வேகமாகப் பரவி வருகிறது. சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை காரணமாக போதிய அளவு மருந்துகள் இப் பகுதியில் இல்லாமையால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. கடந்த சில தினங்களில் மட்டும் பத்து நோயாளிகள் பலியாகியுள்ளனர். மேலும் பலர் மூதூர், திருமலை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் என்றுமில்லாதவாறு கடும் வரட்சி தலைதூக்கியுள்ளதால் கோடை நோய்கள் பலவும் அப்பகுதிகளில் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய மீனவர் மீது கடற்படைத் தாக்குதல்

சரக்குக் கப்பல் சிறிலங்காப் படையினரால் முல்லைக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடிக்கப்பட்டதையடுத்து பாக்கு நீரிணையில் சிறிலங்கா கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தமிழகத்திலிருந்து புறப்பட்ட மீனவர்கள் இந்தியக் கடற் பிரதேசத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அப் பகுதிக்கு வந்த சிறிலங்கா கடற்படையின் ரோந்துக் கப்பல்கள் அம்மீனவர்கள் மீது தாக்குதலை நடாத்தியதுடன், கடற்படையினர் ஒரு மீனவரை கடலில் வீசியெறிந்துள்ளனர்.

கடலில் தத்தளித்து உயிர் போகும் நிலையில் காணப்பட்ட இம் மீனவரை ஏனைய மீனவர்கள் கரைசேர்த்துள்ளனர். கரைசேர்ந்த இம் மீனவர்கள் தமக்கு சிறிலங்காப் படையினர் செய்த கொடுமைகளை அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.


## விற்பனைக்கு

60 இருக்கைகள் கொண்ட உணவகம் விற்பனைக்கு உண்டு

Rest Mit Take Away
Am Bahnhof Wiedikon
Freyastr -03,
8004 Zurich
Tel: 01.2421444


# வாடகைக் காரில் பயணம் செய்த சந்திரிகா

சார்க் மாநாட்டுக் காலப் பகுதியில் தனது உத்தியோக பூர்வ வாகனத்தில் பயணம் செய்வதற்கு பயந்த சந்திரிகா, பல தடவைகள் வாடகைக் காரில் பயணம் செய்த விடயம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இவ்வாறாக வாடகைக் காரில் ஒரு முறை சந்திரிகா பயணம் செய்தபோது சிறிலங்காக் கடற்படையின் சிப்பாய் ஒருவர் அவ்வாகனத்தை மறித்து சோதனை செய்தபோது அதில் சந்திரிகா பயணம் செய்வதை அறிந்துகொண்டு தான் வாகனத்தை சோதனை செய்ததை மன்னிக்குமாறு சந்திரிகாவிடம் கோரியுள்ளார். அவ்வாறும் சமாதானமடைந்த சந்திரிகா, உடனே கடமையைத் தானே நீர் செய்தீர் எனக்கூறி தனது பிள்ளைகள் பயணம் செய்த மற்றொரு வாகனத்தையும் உடனே அனுமதிக்குமாறு கோரியுள்ளார்.

ஆனாலும் தனது உயரதிகாரிகளிடம் அனுமதிபெற்ற பின்னரே அவ்வாறு செய்யமுடியுமெனக் கூறிய அச் சிப்பாய், தனது உயரதிகாரியிடம் அனுமதியைக் கோரியுள்ளார். அனுமதி கிடைத்ததும் சந்திரிகாவின் பயணம் தொடர்ந்தது.

தனது உத்தியோக பூர்வ வாகனத்தை இலக்காக வைத்து தாக்குதல் நடாத்தப்படலாம் என்ற பீதியினாலேயே சந்திரிகா வாடகைக் காரைப் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அகதி கைதிகள்....

அனைவரையும் இம் மாதம் 22ம் திகதி மனித உரிமைகள் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் ஒருவரான பி. ஜெயச்சந்திரன் என்பவர் தொடுத்த வழக்கின் பிரகாரமே இவ் உத்தரவினை மாவட்ட நீதி மன்றம் பிறப்பித்துள்ளது. கடந்த 3ம் திகதி மத்திய சிறைச்சாலை அதிகாரிகளூடாக இக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அக் கடிதத்தில் சிறிலங்காவிற்கு தாம் நாடு கடத்தப்பட்டால் தமது உயிருக்காபத்து எனவும், இதனால் தகுந்த பத்திரங்களுடன் தம்மை விடுதலை செய்தல் வேண்டும். அல்லது தமிழக அரசாங்கம் தம்மை கையாளவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. 1993ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கைது செய்யப்பட்ட இவ் 9 பேரும் தடா வழக்குகளை விசாரிக்கும் விசேட நீதி மன்றத்தினால் விசாரிக்கப்பட்டபோதும், அவ் வழக்கிலிருந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டதுடன், அவர்களை கொண்டுராவண்டு [illegible] வேண்டும் என பொலிஸ், நகர ஆணையாளருக்கு உத்தரவும் இடப்பட்டிருந்தது. பின்னர் உயர் நீதி மன்றத்தில் மீட்டு செய்த மேன் முறையீடு காரணமாக அவர்களுக்கு 3 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இவர்கள் சிறையிலிருந்து விடுதலையான போதிலும் வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒருவருடம் தடுத்து வைக்கப்பட்ட நிலையிலேயே 1997ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆயினும் வெளிநாட்டவர் சட்டத்தை மீறியதாக இவர்கள் மீது மீண்டும் குற்றஞ்சாட்டு சுமத்தப்பட்டு தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வத்தளைப்....

ஒரு பகுதியினர் மேலதிக விசாரணைக்காக வாழைச்சேனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களுடன் சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரிகள் சிலரும் வாழைச்சேனைக்குச் சென்றுள்ளனர்.

வத்தளையில் கைதுசெய்யப்பட்டவர்கள் ஏன் வாழைச்சேனைக்கு அனுப்பப்பட்டார்கள் என்பது குறித்து தெளிவான விளக்கங்கள் எதுவும் வழங்க சிறிலங்காப் பொலிஸார் மறுத்துவிட்டனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டு. நகரின்....

கூட்டணி) சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இம் மர்மக்கொலைக் குழுவினால் மட்டக்களப்பு தமிழ் மக்களிடையே பெரும் பீதி நிலவி வருகிறது. பல அப்பாவி இளைஞர்கள் கொடூரமான முறையில் இக் கொலைக் குழுவால் கொல்லப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ள இக் கடிதத்தில் இராணுவ முகாம்களில் தங்கியிருக்கும் கொலைக்குழுவினரே இவ் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.


(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டக்களப்பில்....

இனையடுத்து அவர்கள் அனைவரும் வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இக் குண்டுவெடிப்பின் காரணமாக கட்டடங்கள் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது.

மக்கள் மத்தியில் இக் குண்டு வெடிப்பு நடைபெற்றதானது இராணுவத் தரப்பின் மீது சந்தேகத்தை தோற்றுவிப்பதாக மட்டுநகர் வாசிகள் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு பகுதியில் முன்னரும் இத்தகைய சதிகார வேலைகளை சிறிலங்கா படைத்தரப்பு மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.


## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 25.12.1963

ஆண்டவன் அரவணைப்பில் 27.08.1997

### இராசா ஈஸ்வரன்

வத்திராயன் வடக்கு

அலை கடலில் தத்தளிக்கும் படகுபோல
தவிக்கின்றோம் உனை எண்ணி..
ஈனமாக உனைப் போற்றி வாழ்ந்த உன் மனைவியைவிட்டு
உனையேன் ஈசன் அழைத்தான்?
உனது வாரிசுகள் நால்வரையும் தவிக்கவிட்டு
ஏன் சென்றாய் அந்த சிவலோகம்...
உனதன்பும் அரவணைப்பும் அந்த ஈசனுக்கும் தேவையோ
அதனால்தான் உனையழைத்தான்போல்? என்ன செய்வோம் நாம்..

உனைப்பெண்ணி கண்ணீர் மழை சொரிகின்றோம்,
நீ எமைவிட்டு ஓராண்டேன்ன ஒரு நூறு ஜென்மம்
போனாலும், உனது நினைவும் எமைவிட்டகலாது
உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அந்த
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

தகவல்:
மைத்துனன்மார் தேவன், தயாளன்
சுவிஸ் (034- 4971824)



AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும்
மொத்த விலையில் கொடுக்கப்படும்.
மரக்கறி வகைகளும் மலிவான
விலையில் மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளலாம். Rungis
மரக்கறி வகைகளும் மொத்த
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

# ஈழமுரசு

Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64



மீண்டும்

நல்லூர் படம் பதித்த 'வூட்லண்ட்ஸ் கோல்' தொலைபேசி அட்டைகள் வெளியாகிவிட்டன. மேலதிக விபரங்களுக்கு 30-ம் பக்கம் பார்க்க

Nº: Local Nº: Vert
இந்தியா - 45 30

Nº: Local Nº: Vert
இலங்கை - 40 30

வூட்லண்ட்ஸ்

100 Frs TTC




தொடர்புகளுக்கு:

வூட்லண்ட்ஸ் உணவகம்

207 Rue de Fg. St. Denis, 75010 Paris. Tel: 0140370820


# வன்னிக் கள நிலைமையை தமக்கு சாதகமாகவே புலிகள் கொண்டிருக்கின்றனர்

**- ரணில் -**

ஜெயசிக்குறுய் போரை எப்படி எப்படியோவெல்லாம் முன்னெடுப்பதாக அரசு வெறும் வாய்ச்சவடால் விட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைய வன்னி போர் நிலவரத்தைப் பார்த்தால் விடுதலைப் புலிகளே தமக்குச் சாதகமாக கள நிலைமையைக் கொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த அரசு இந்தப் போரை நடாத்த முடியாதபடி முடமாகிவிட்டது. விடுதலைப் புலிகள் நோக்கியே இங்கு அரசின் நிலை பலவீனப்படுத்துவது தான். அதனை அவர்கள் செவ்வனே செய்துகொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலும் திருமலையிலும் சில பகுதிகளை இராணுவம் விடுவித்துக்கொண்டதாகக் கூறினாலும் அங்கும் நிலைமைகள் மோசமாகத்தான் தெரிகின்றன. தொடக்கத்தில் குறைந்தளவாக இருந்தாலும் பாரிய இராணுவத்தை முடக்கும் அளவிற்கு விடுதலைப் புலிகள் திறமையானவர்களாகச் செயல்படுகிறார்கள்.

இவ்வாறு சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றின்போது தெரிவித்திருந்தார்.

முறையானதொரு போரை நடாத்தும் வல்லமையை இன்று விடுதலைப் புலிகள் கொண்டிருக்கிறார்கள். சிறிலங்காவின் படையணிகளை சமாளிக்கும் வலுவும் அவர்களுக்குண்டு. தற்போது அரசின் பொருளாதாரத் திட்டங்களை தகர்க்கும் அளவிற்கு அவர்களது திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

நாட்டின் உல்லாசப் பிரயாணத்துறை வீழ்ந்துவிட்டது; பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளது. இதற்கெல்லாம் காரணங்களை ஆராய்ந்தால் அரசின் பலவீனங்கள் புலப்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# வத்தளைப் பகுதியில் பாரிய தேடுதல்வேட்டை கைதானவர்கள் வாழைச்சேனையில்

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளைப் பிரதேசத்தையும் அதனையொட்டிய ஒலியமுல்லை, சேகித்த, வெலிய முனை ஆகிய பகுதிகளையும் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உள்ளாக்கிய சிறிலங்காப் படைகள், அங்கு வசித்த தமிழர்களில் 75க்கும் மேற்பட்டோரைக் கைதுசெய்துள்ளனர். கைதானவர்களில் பலர் மேலதிக விசாரணைக்காக வாழைச் சேனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கம்பஹா, களனி பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பெருமளவு பொலிசாரும், இராணுவத்தினரும் இப்பகுதிகளில் தேடுதல்களை நடாத்தி தமிழர்கள் என இனம் காணப்பட்டோரை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் முடிவில் ஆண்கள், பெண்கள் உட்பட 75க்கும் மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில்

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

# மட்டுநகரின் மர்மக் கொலையாளிகள் அரச ஆதரவுக் குழுவினரே

**- ஜோசப் பரராஜசிங்கம்**

மட்டு நகரில் அண்மைக் காலமாக உலாவும் மர்மக் குழுவினரால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு மட்டு நகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினருடன் இணைந்து செயற்படும் குழுவினரே காரணம் என சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் (தமிழர் விடுதலைக்

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

# மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிள் குண்டுவெடிப்பு - 17 பேர் காயம்

17.08.98

மட்டக்களப்பு நகரில் இன்று நடைபெற்ற மோட்டார் சைக்கிள் குண்டுவெடிப்பொன்றில் 17 பேர் காயமடைந்துள்ளனர். சன நெரிசல் மிகுந்த இடத்திலேயே இக் குண்டுவெடிப்பு நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேரக் கணிப்பின்படி வெடிக்கக்கூடியதாக பொருத்தப்பட்ட இக்குண்டு சரியான நேரத்திலேயே வெடித்துள்ளது. குண்டு வெடிப்பு நிகழ்ந்ததும் அப்பகுதியில் கூச்சலும் குழப்பமும் காணப்பட்டது. காயமடைந்தவர்கள் உதவிகோரி அலறினர்.

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

# அகத் கைதிகள் டெல்லியில் மனு

1993-ம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்த அகத் என்ற கப்பல் மீது இந்திய கடற்படையினர் தாக்குதல் நடாத்தி அதனை மூழ்கடித்தது தெரிந்ததே. அப்போது அக் கப்பலில் பயணம் செய்த 9 பேர் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு விசேட முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள்

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

# சிறுப்பிட்டியில் கண்ணிவெடித் தாக்குதல் இரு சிப்பாய்கள் பலி

யாழ்குடா சிறுப்பிட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் இரு சிறிலங்காச் சிப்பாய்கள் பலியானதுடன், மேலும் சிலர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் பயணம் செய்த வாகனமும் சேதமடைந்துள்ளது.

கடந்த 14-ம் திகதி நண்பகல் 12.20 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. படையினரை ஏற்றிக்கொண்டு உழவு இயந்திரமொன்று யாழ். பருத்தித்துறை வீதிவழியாக சென்று கொண்டிருந்தபோது அவ் உழவு இயந்திரத்தை இலக்காகவைத்து கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கண்ணிவெடியில் சிக்கிய உழவு இயந்திரம் பல மீற்றர் தூரத்திற்கப்பால் வீசியெறியப்பட்டது. ஆனாலும் யாழ். குடாவிலிருந்து கிடைக்கும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளின்படி, இத் தாக்குதலில் குறைந்தது இரண்டு சிப்பாய்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


பாரிஸ் லாசப்பலில்

# தர்ஷனா உணவகம்

நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41